# விடுதலைப்புலிகள்

குரல் 101 | ஐப்பசி — கார்த்திகை | அன்பளிப்பு 06/-

# உண்மையான விடுதலைப் போராட்டங்களையும், குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களையும், உலகநாடுகள் வேறுபடுத்திக் காணவேண்டும்.

## மாவீரர் நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் தெரிவிப்பு



''பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலக நாடுகள் முதலில் அரசியல் வன்முறையின் மூலவேர்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்தான் உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காண முடியும்.''

என அனைத்துத் தரப்பாலும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப் பட்ட மாவீரர் நாளன்றைய தனது உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்தார். அவரது உரையை முழுமையாக இங்கு தருகிறோம்.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

விடுதலைவேண்டிக் களமாடி வீழ்ந்த எமது வீரப் புதல்வர்களை நாம் எமது நினைவில் உயிர்ப்பித்துப் பூசிக்கும் நன் நாள்.

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப் பதற்காகத் தமது சொந்த வாழ்வை ஈகம் செய்த சுதந்திர வீரர்களுக்கு நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்தும் புனித நாள்.

விடுதலைக்காக எமது இயக்கம் கொடுத்த விலை அளப்பரியது. உலகத்தில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் புரியாத அற்புத சாதனைகளை நாம் ஈட்டினோம். ஒப்பற்ற ஈகங்களைப் புரிந்து தியாகத்தின் சிகரங்களைத் தொட்டோம். இதனால் மானிடத்தின் விடுதலை வரலாற்றில், ஒரு மகத்துவமான இடத்தைத் தேடிக்கொண்டோம். எமது இனத்தின் வீரத்திற்கும் விடுதலை உணர்விற்கும் பெருமை சேர்க்கும் இம் மகோன்னதநிலைக்கு எம்மை இட்டுச் சென்றவர்கள் எமது மாவீரர்களே.

மனித நாகரீகம் தோன்றிய காலந் தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும்வரை விடுதலைப் போராட்டங்களும் தொடரும். ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்தில் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்.

இன்றைய உலக ஒழுங்கு மாறிவருகிறது. சர்வதேச அரசியல் உறவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. மனித உரிமைப் போராட்டங்கள் சம்பந்தமாக உலகின் பார்வையும் மாறிவருகிறது. அரசியற் கோட்பாடுகளிலும் தார்மீகக் கொள்கைகளிலும் அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன.

(13ம் பக்கம் பார்க்க)

**உள்ளே —**


- சந்திரிகாவின் முதலாவது தற்கொலை முயற்சி
- மாறிவரும் அரசியற் காட்சிகள் விடுதலைப் போரில் திருப்புமுனை
- ஐந்துவருட போர்நிலைமை மாறுகிறது
- உருக்கில் உறைந்த பனிமலை
- சாவுக்குள் உழைத்த வீரம்
- வெந்து துளிர்த்த மலர்கள்
- புயலில் எழுந்து நிற்க அவன் கற்றுக் கொள்ளட்டும்
- உலகைகளம்


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# தமிழரின் ஆயுதப்போராட்டத்தை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும்

தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு ஒரு படிமுறை வளர்ச்சி உண்டு. ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் அரசியல் உரிமைகளைப் பெற்று வாழப் போராடிய தமிழ் இனத்தை தன்னாட்சி உரிமைக்காகப் போராடும்படி சிங்கள அரசின் இனவாதச் செயற்பாடுகள் நிர்ப்பந்தித்தன.

ஜனநாயக வழியில் - சாத்வீக முறைகளில் தமிழர் நடாத்திய உரிமைப்போராட்டத்தை வன்முறைவடிவில் – ஆயுதப் போராட்டப்பாதையில், அரச பயங்கரவாதம், தள்ளியது. தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான ஆயுதப்போராட்டத்திற்கு புலிகள் இயக்கம் தலைமை கொடுத்தது.

இந்த தன்னாட்சி உரிமைப்போராட்டத்தை - 1977 பொதுத்தேர்தலில் – தமிழ் மக்கள் தங்கள் வாக்குரிமை மூலம் அங்கீகரித்து, ஆதரவு வழங்கினர்.

ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவது என்ற இலட்சியத்தில், புலிகள் இயக்கம், அன்றிலிருந்து உறுதியாக இருந்து வருகின்றது.

எத்தனையோ சோதனைகள் - நெருக்கடிகள் சூழ்ந்தபோதும் அந்த அரசியல் இலட்சியத்திலிருந்து வழுவாது, கொண்ட கொள்கையில் உறுதியாகவுள்ளது. தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தையும் உயர்நிலைக்கு வளர்த்துவிட்டது.

இன்று, தமிழ்மக்கள் ஏகோபித்த நிலையில் புலிகள் இயக்கத்தை தமது அரசியல் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு போராட்டத்தின் இன்ப - துன்பங்களில் முழுமையாகப் பங்காற்றி வருகின்றனர்.

இந்த அரசியல் யதார்த்தத்தை நிராகரிக்க முடியாத தமிழ் அரசியல் கட்சிகளும் புலிகள் இயக்கத்தையும் – அதன் தலைமையையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

தமிழ் மக்கள் - தமிழ் அரசியல் கட்சிகள் – தமிழர் அமைப்புக்கள், நிறுவனங்கள் - என்று தமிழினமே புலிகளின் பின்னால் அணிதிரண்டு போராட்டத்திற்கு வலுச் சேர்த்துள்ளன.

தமிழர் அரசியலில் ஏற்பட்டுள்ள இந்தப் புதியபரிமாணம் சிங்கள அரசை திகைக்க வைத்துள்ளது.

சதித்தனமான அரசியல் அணுகுமுறைகள் மூலமும் - கடுமையான பொருண்மியத் தடைகள் வாயிலாகவும் - கொடூரமான இராணுவ வழிமுறைகள் மூலமும் தமிழரின் விடுதலை எழுச்சியை நசுக்க முயன்ற சிங்கள அரசு இந்தப் புதிய அரசியல் சூழலைக் கண்டு அச்சமடைந்துள்ளது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை தடுத்து நிறுத்தும் ஆற்றலை தனது அரச இயந்திரம் இழந்துவிட்டது என்ற கையறு நிலையில் போராட்டத்தை ஒடுக்க மாற்று வழிவகைகளை, சிங்கள அரசு, தேடி அலைந்தது.




'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற மேலைத்தேய நாடுகளின் அரசியல் நிலைப்பாட்டை சிங்கள அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த முனைகின்றது.

இதனால், தமிழரின் விடுதலைப்போராட்டத்தை பயங்கரவாதமாக சர்வதேசத்தின் முன்னால் சித்தரிக்கத் தொடங்கியது.

தமிழ் - சிங்கள இனமுரண்பாட்டின் ஆழ - அகலங்களை சரிவர அறிந்து கொள்ளாத சில மேலை நாடுகள் தாங்கள் தயாரித்த பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் இணைத்து சிங்களப்பேரினவாதத்திற்கு மகிழ்ச்சியூட்டியுள்ளன.

முன்னர், தமிழரின் தாயகநிலத்தைச் சிதைக்கும் வழிமுறைக்கு 'விவசாயக் குடியேற்றம்' என்று பெயரிட்டு தமிழர் நிலங்களை அபகரித்தது போல; பின்னர், தமிழரின் தேசிய தனித்துவத்தை அழித்தொழிக்க ஒரே நாடு - ஒரே மக்கள் என 'இலங்கைத் தேசியம்' பேசியது போல;

இன்று, தமிழரின் விடுதலைப்போராட்டத்தை, 'பயங்கரவாத நடவடிக்கை' என முத்திரைகுத்தி போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு எண்ணுகின்றது.

புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல. அது தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு தலைமை தாங்கும் ஒரு விடுதலை இயக்கம். தமிழ்மக்களின் அன்பையும் - ஆதரவையும் பெற்ற ஒரு மக்கள் இயக்கம். தமிழர் மத்தியிலுள்ள பாராளுமன்ற அரசியல் கட்சிகளாலும் – சமூக நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் தலைமைச் சக்தி தான் புலிகள் இயக்கம்.

வெளிப்படையாகவே தெரிகின்ற இந்த அரசியல் உண்மையை உலகின் சில அரசுகள் கருத்தில் எடுக்காதது வேதனை அளிப்பதாக உள்ளது.

இன அழிப்பை மேற்கொண்டுவரும் சிங்கள அரசை சுற்றவாளிபோலவும் - அதன் ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும் ஒரு விடுதலை இயக்கத்தை குற்றவாளிக் கூண்டிலும் நிறுத்த முயலும் அந்த அரசுகளின் செயல் வருத்தமளிப்பதாக உள்ளது. நீதியைத் தண்டித்து அநீதிக்குத் துணைபோவதாக உள்ளது.

''அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்தான உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணமுடியும்'' என்ற தலைவர் பிரபாகரனின் கூற்றை உலக சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு எனக்கூறுவதன் மூலம் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை எவராலும் நிறுத்திவிட முடியாது.

25 வருட ஆயுதப் போராட்ட வரலாற்றில் தமிழர் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்தாலும் இறுதியில் மக்களின் ஒன்றுபட்ட பலத்தால் அவை வெற்றிகொள்ளப்பட்டே வருகின்றன.


தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான ஆயுதப் போராட்டம் இறுதி வெற்றியை நோக்கி விறுநடைபோடும் இன்றைய சூழலில், தாயகத்திலும் – புலம்பெயர்ந்த நிலையிலும் வாழும் தமிழ் மக்கள் தலைவர் பிரபாகரனின் கரங்களை மேலும் வலுப்படுத்தி தமிழரின் விடுதலையை வென்றெடுப்போம்! என இந்த மாவீரர் நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

---

இவ பீ பீ சிக்குப் போய் ஊதி ஊதி விட்டதெல்லாம் செபஸ்தியானுக்கு முன்னாலேயே உடஞ்சு உடஞ்சு போக உலகம் முழுக்கப் பாத்திட்டுது.

இஞ்ச வந்து தேர்தல் களத்தில இறங்கின உடன சிங்கள மக்களுக்கு ஊதி ஊதி விடுறா. ஆனால் இந்த ஊதல் வேற.

'டக்' சொல்லுறார் ''தமிழ் மக்களே! அவ ஊதி விடுறதெல்லாம் பொன்னுலகமா தெரியுது பாருங்கோ'' எண்டு.



# சந்திரிக்காவின் முதலாவது தற்கொலை முயற்சி

க. வே. பாலகுமாரன்

**ச**ந்திரிகா அம்மையார் ஒருவாறாக இம்மாதத்தில் ஏழு ஆண்டுகால சனாதிபதி பதிவியை நிறைவுசெய்துள்ளார். இந்த ஏழு ஆண்டுகாலத்திலும் தான் செய்த மகத்தான சாதனையெதுவென அவரே பெருமையுடன் கூறிக்கொள்கின்றார். இக்காலப்பகுதி முழுவதும் தான் எதனையும் ஏன்செய்யவில்லையென்பதை தனது ஊடாக ''சொல்லாடல்கள்'' மூலம் சிங்கள மக்களுக்கு மிகத்தெளிவாக விளக்குவதே தான் செய்தது என அவரே ஒப்புக்கொள்வார். இது போதாதென்று இறுதியாக இம்மாதம் ''பீ. பீ. சி,சி. என். என் ஊடக வலைப்பின்னல்களின் வழி சர்வதேசத்திற்கும் இவ்விளக்கத்தினைக்கொடுத்து நாடு திரும்பியுள்ளார். ''மிகுந்த எச்சரிக்கையோடு திறமையாக சொற்கள் ஒழுங்குபடுத்தப்படும் இடம் அரசாங்கம். இங்கே சற்றும் உணர்ச்சிக் கலப்பற்று, கறாரான, சம்பிரதாயபூர்வமாக சொற்கள் பரிபாலனம் செய்யப்படுகின்றன. சொற்களில் குறிப்பிட்டுச் செயலில சற்றும் சோர்வு அல்லது சரிவு ஏற்படாதவாறு பாாத்துக்கொள்ளப்படுகின்றது. அன்றாடப் புழக்கத்தில் சொற்களில் குறிப்பிட்டுச் செயலில் உள்ள நெகிழ்ச்சியும் வெளிப்படைத்தன்மையும், இலகுத்தன்மையும் இராசதந்திர பரிவர்த்தனையில் இறுக்கப்பட்டு சங்கேதத்தன்மை பெற்றுவிடுகின்றன. அதிகாரத்தின்சுமை ஏறுகின்றபோது சொற்களுக்கு மூச்சுமுட்டுகின்றது.'' என ராஜ்கௌதமன் தனது அறம் / அதிகாரம் என்கிற நூலில் எழுதியமை பொதுவான அதிகார அறிவுச் சொல்லாடல்களைஅதிகாரவர்க்கத்தார் பயன்படுத்தி வருகின்றமையை குறிக்கின்றது. இதற்கெதிராக ஒடுக்கப்பட்டோர் தமக்கான ''அறிவுச் சொல்லாடல்களை'' மேற்கொள்ளவேண்டும் என்பது அவர் கருத்து. ஆனால் இங்கே அம்மையாரோ ஒருபடி மேலேபோய் ஆதிக்க அறிவுச் சொல்லாடல்களை மிக நுட்பமாக வடிவமைத்து பலவேளைகளில் அறிவுச் சொல்லாடல்களாகவும் அறம், அமைதி, இணக்கம் போன்ற சொற்களால் கட்டுமாணம் செய்யப்பட்ட பிம்பங்களை உருவாக்கும் உணர்வுச் சொல்லாடல்களாகவும் பயன்படுத்தி இவற்றின் வழி ஒரு மாயபிம்பத்தை உருவாக்கி பேணிவந்தார். ஆனால் இப்போது அவர் உருவாக்கிய பிம்பம் அவராலே சிதைக்கப்படும் அவலம் நிகழ்வதை அவருட்பட உலகமே பார்த்து நிற்கின்றது.

அவர் பயன்படுத்திய அதே சொல்லாடல்கள் இப்போது அவரை வீழ்த்த பயன்படுகின்றன. ''அரசியல் உறவாடல்களில்'' வலிமைமிகு சொற்களை அம்மையார் பயன்படுத்தி அதிகாரத்தினை செலுத்தியபோது அவருக்கு வலக்கையாக விளங்கியவர் சமுர்த்தி புகழ் எஸ். பி. திசாநாயக்கா அரசியல்காடைத்தனத்திற்கு புதிய அகராதியே எழுதியவர். இப்போது ''அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல'' பறந்து இப்போதுதான் ஆதிக்க அரசியல் அறிவுச் சொல்லாடலை பயிலத்தொடங்கும் ரணிலுக்கு உதவுகிறார். அவர் மிக வஞ்சகமாக அம்மையாரின் தரத்திற்கேற்ற மொழிநடையில் கூறியதை வாசகர் நலன்கருதி தணிக்கை செய்து தருகின்றோம்.'' டிசம்பர் 5ம் திகதியனறு சனாதிபதி சந்திரிக்கா தலைவிரி கோலமாக கோட்டைப் பகுதியில் நடந்து திரிவார். நிச்சயமாக அவர் பைத்தியமாக மாறப்போகின்றார். அவர் இம்முறை இங்கிலாந்து சென்றது சாவதேச மாநாடுகளில் பங்குபற்றவல்ல. உளவியல் "சிகிச்சைபெறவே''

எஸ். பியின் மிக இழிவான எள்ளிநகையாடலின் நோககம் எதுவாகவிருந்தாலும் அம்மையாரின் இலண்டன் பயணம் விளைவித்த பெருநாசம் எஸ். பியின் கூற்றினை கவனிக்கச் செய்கின்றது. உள்நாட்டில் ஏற்பட்ட பெரும் சரிவை 'நிமிர்த்த'வெளிநாடு சென்றவர் இப்போது மீளமுடியாத பாரிய சரிவோடு திரும்பியுளளார். அவரது சிறப்பியல்பான தன்னம்பிக்கைத்தொனி அகங்காரத் தொனியாகி நீதிமன்றங்களின குறுக்குவிசாரணைக் காட்சி போன்று அவரது சர்வதேச செவ்விகள் அமைந்த கதையை அறியுங்கள். இலண்டனில் சர்வதேச புகழ் வாய்ந்த வெகுசன தொடர்பு நிறுவனமொன்றை பெரும் பணச் செலவிலமர்த்தி சர்வதேச முதன்மைச் செய்தியூடகங்களில் வரிசையாக செவ்விகளை அளிக்கவைப்பதன் மூலம் அவரை 'நிமிரச்' செய்ய முயலப்பட்டது. எனவே பீ. பீ. சி, சி. என். என் போன்றவற்றின் நிகழ்ச்சிகள் சிலவற்றில் தோன்றி தனது ஆளுமையை உலகிற்கு அறிவிக்க அவருக்கும் வாய்ப்புச்செய்து தரப்பட்டது. குறிப்பாக பீ. பீ. சியில் ஒளிபரப்பாகும் ரிம் செபஸ்தியானின புகழ் பெற்ற நிகழ்ச்சியான 'கடின உரையாடல்', அமெரிக்க சி. என். என் இன் 'பயங்கரவாதத்திற்கெதிரான தாக்குதல் என்கிற நிகழ்ச்சிகளில் அம்மையார் மிகுந்த தன்னம்பிக்கையோடும் வழமையான எதனையும் சமாளிக்கும் பாணியிலும் தோன்றினார். ஆனால் நிகழ்ச்சிகளின் முடிவில் நொந்து, நைந்து, நூலாய்ப்போன கந்தல் துணிபோல திரும்பிவந்தார். தமது தலைவியின் உச்ச சொல்லாடல் திறனைக்கான உற்சாகமாக செய்மதித் தொலைக்காட்சிகள்முன்னமர்ந்த சிங்களவர் முகங்கள் இறுகிப்போய் பேயறைந்த முகங்களாயின. சர்வதேச தொலைக்காட்சிமுன் தமது தலைவியின் தற்கொலை முயற்சியிதுவென தாமே (சண்டே ரைம்ஸ் 4-11) வருணித்து தலைகுனிந்தனர். பீ. பீ. சீ கலையரங்கத்தில் ரிம் செபஸ்தியான்முன் அம்மையார் தன்னம்பிக்கையோடுதான் வந்தமர்ந்தார். செபஸ்தியானும் வழமையான புன்சிரிப்போடும், துடுக்குத்தனமான ஆனால் கூர்மையான பார்வையோடும் தனது குடையும் வினாக்களை இயல்பாகவே தொடுத்தார். ஆனால் அவர் விரித்த வலை, வைத்தபொறியில் அம்மையார் தாமாகவே சிக்கி மீளமுடியமால் போனகதை இவ்வாறுதான் நிகழ்ந்தது. முதலில் பயங்கரவாதம் பற்றியும் உலகம் இவ்விடயத்தில் காட்டும் இரட்டை வேடம் (இங்கே இரட்டைவேடம் என்பது தலிபானுக்கு ஒரு நீதி புலிகளுக்கு ஒரு நீதியா என்பது) பற்றியும அம்மையாரின் விளக்கம்கோரி கேள்விகள் அமையவே அம்மையாரும் உற்சாகமாகப் பதிலளித்தார். ஆகவே பயங்கரவாதத்தினை நசுக்க நீங்கள் உலகிடம் உதவிகோரினீர்கள், அவர்கள் புலிகளைத் தடைசெய்தார்கள். அது உதவிதானே என வினாவர ஆமாம் அதைப் பாராட்டுகின்றேன் என அம்மையார் பதிலிறுக்க எல்லாம் நல்லபடியாக செவ்வி நகர்ந்தது போல்த்தானிருந்தது.

அப்படியானால்ச்சரி, உலகம் உங்களிற்கு உதவியதையிட்டு நீங்கள் திருப்தி அடைகின்றீர்கள், அதேவேளை உங்கள் அரசின மனித உரிமைகள் நிலைபற்றியும் உலகம் கவனத்தில் கொள்கின்றது. சரிதானே என வினாவர நிச்சயமாகச் சரிதான என தலையை ஆட்டிப் பதிலளித்தார். இங்கேயிருந்துதான் சந்திரிகாவின் நா தடுமாறத் தொடங்கியது. அவரது பிறவிக்குணமான பொய்மை, எடுத்தெறிந்து பேசுதல், ஆணவம் மேட்டுக்குடியினருக்குரிய மந்தப் புத்தி எல்லாமே மிக இயல்பாகவே வெளிவரலாயின. உங்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ்மக்கள் தாக்கப்பட்டுள்ளனரே என செபஸ்தியான் கேட்க-சனாதிபதி இல்லையென்று மறுக்க - 2000ம் ஆண்டிற்கான அமெரிக்க அரசின் மனிதஉரிமை அறிக்கையை கேள்வியாளர் மேற்கோள் காட்ட-அம்மையார் குழம்பபின் அவ்வறிக்கையைப் பார்க்கவில்லையெனக்கூற - அப்படியானால் அமெரிக்க அரசுபொய்சொல்கின்றதா? என வினாவெழுப்ப - அம்மையார் தடுமாற நிமலராஜன் படுகொலை, பிந்துனுவேவா படுகொலை, பொருண்மியத் தடையென கேள்விக்குமேல் கேள்வியெழும்ப - அம்மையார் திணறினார் / திக்குமுக்காடினார். ஐ. தே. கட்சியே எல்லாவற்றுக்கும் காரணமென அசட்டுத்தனமாகப் பதிலளித்தார். பொருண்மியத் தடையா? இதுவென்ன புதுக்கதையென அம்மையார் அதிமேதாவித்தனமாகப் பதிலளித்தபோது தனது அடுத்தநெற்றியடியை செபஸ்தியான் இறக்கினார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் மக்கள் வறுமையில் வாடுகின்றார்களே, நாற்பது விழுக்காட்டளவு சிறார்கள் போசாக்கின்மையால் வதங்குகின்றார்களே என 'ஒக்ஸ்பாம்' அறிக்கை கூறுகின்றதே, நீங்கள் சர்வதேச உதவி நிறுவனங்களை உணவு வழங்கத் தடுக்கின்றீர்களே என அடுக்கடுக்காக ஆதாரபூர்வமாக வினாக்கள் வந்தன. யாரிந்த ஒக்ஸ்பாம் ஆள்? அவரை நான் சந்திக்கவேண்டும். யுனிசெவ், அமெரிக்க கெயர் எல்லாம் இப்பகுதிக்குச் செல்கின்றன. 1994ம் ஆண்டிற்கு முன்தான் பெரும் பொருண்மியத் தடையிருந்தது. அதைத்தான் நான் பதவியேற்ற பத்துநாட்களுக்குள் நீக்கிவிட்டேனே என அண்டசராசரங்கள் எல்லாம் அதிர புளுகித்தள்ளினார். சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டிபோல நாடுமுழுவதுமே நாற்பது விழுக்காடு சிறுவர்கள் ஊட்டமின்றி வாடுகின்றார்கள். நாம் ஒரு ஏழை நாடல்லவா என வேறு ஏக்கப்பெருமூச்சும் விட்டார். திடுக்கிட்டுப்போன செபஸ்தியான் மேலும் சில கேள்விகளோடு செவ்வியை முடித்துக் கொண்டார்.

குளிக்கப்போய் சேறுபூசிய கதை இத்தோடு முடியாமல் சி. என். என் இலும் தொடர்ந்தது. அங்கும் 'அளக்க' முற்பட்டபோது குறுக்குவிசாரணைக் கைதிபோல சி. என். என் இன் இளைய செய்தியாளர் ஒருவரால் கேள்விகள் கேட்கப்பட்டார். நோர்வே பேச்சுவார்த்தையை நீங்கள்தானே முறித்தீர்களென பொருள்பட வினாக்கள் வந்த போது மிக நீண்டவிளக்கம் கொடுக்க முற்பட்டபோது வழமைக்கு மாறாக அம்மையார் இடைமறிக்கப்பட்டார். (அம்மையார் தளம்பியதாலேயே தான் இடைமறித்ததாக நிகழ்ச்சி நடாத்தியவர் பின் கூறினாராம்) மதிப்புமிக்க (Human Right Watch) நிறுவனத்தையே தூக்கியெறிந்துபேசி, அதனைப் புலிகளின் வால் என கொச்சைப்படுத்தியபோது பார்த்தவர்கள் தலையிலடித்துக்கொண்டார்கள். இவ்வாறாக இறைமைமிக்க நாட்டின தலைவியாகப் போனவர் போர்க்கால குற்றவாளியாகத் திரும்பிவந்தார்.

இச்சாதனைகள் பற்றி சிங்களவர் உலகம் என்ன கருதுகின்றது? பேரினவாத ஐலண்ட் ஏட்டின் இனவெறிபிடித்த ஐரோப்பிய நிருபரான துசிரணத்துங்க அங்கிருந்து எழுதுகின்றார் (ஐலண்ட் 03 - 11) ''சந்திரிகாவின் பிம்பமே உலகின்முன் சிதைந்துவிட்டது. உள்நாட்டில் ஏற்பட்ட சரிவைச் சரிக்கட்ட சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பலையில் நீச்சலடிக்க வந்தவர் வந்த இடத்தில் தனது வோட்டர்லூவை சந்திக்க நேர்ந்தது. அவரது செவ்வியைக் கண்ணுற்ற சர்வதேச பார்வையாளர்கள் சிறிலங்கா மனிதவதை, பாலியல்வன்முறை, படுகொலைகளின் நரகக்கூடம் என்றே கருதியிருப்பர். சுற்றுலாத் துறைக்கு இன்னொரு பலத்த அடி. பாதுகாப்புப் படையினரின் மனிதஉரிமை மீறல்கள் நியாயப்படுத்தப்பட முடியாதவை. இவற்றினைக் கட்டுப்படுத்தும் வரை உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ பயங்கரவாதத்திற்கெதிரான போரில் வெற்றி பெற முடியாது. இதுவே சர்வதேச அரங்கின்முன் அம்மையார் கற்றுக்கொண்ட பாடம்.'' அம்மையார் மட்டுமல்ல துசிரணத்துங்கவும் இப்பாடத்தினை படித்திருப்பார் என்பது எமது பாடம். 'சண்டேரைம்ஸ்' ஏட்டின் இலண்டன் செய்தியாளர் நெவில்டிசில்வாவும் மிகக் கடுமையாக எழுதியதன் பகுதியை சுருக்கமாகத் தருகின்றோம். ''ஒருவகையில் சொல்லப்போனால் பல்லயிரக்கணக்கான சிங்களவர் துக்கம் அனுட்டிக்க, கண்ணீர் சிந்த சனாதிபதி தொலைக்காட்சிமுன் தற்கொலை செய்துகொண்டார்'' (சண்டேரைம்ஸ் 04 - 11) சிலேடையாக சில்வா எழுதியதோடு எமது உறுதியான கருத்தொன்றையும் இங்கே இணைக்கின்றோம். ஏழுவருட செய்தி முற்றுகை மூலம் எதுவெது மறைக்கப்பட்டதோ அத்தனையும் அம்மையார் முன்னிலையில் அக்கரைச் சீமையில் அகில உலகமும் அறிய வெளிவந்தது; அரசியல் அறம், விடுதலையின் தார்மீகநெறியின் வெற்றி.

விவிலியத்தின் 'இணைத்திருமுறை'யில் 'சிராக்கின் ஞானம்' என்கிற பகுதியில் பின்வருமாறுள்ளது.

''உன் சொற்களை நிறுத்துப் பார்க்க துலாக்கோளையும் எடைக்கற்களையும் செய்துகொள்.

உன் வாய்க்கு கதவொன்று செய்து அதைத் தாளிடு. நாவால் தவறாதபடி எச்சரிக்கையாயிரு.

இல்லையேல் உனக்காகப் பதுங்கியிருப்போர் முன் நீ விழ்ச்சியுறுவாய்''

நன்றி
ராஜ்கௌதமன் -அறம் / அதிகாரம்

# மாறிவரும் அரசியல் காட்சிகள் விடுதலைப் போரில் திருப்புமுனை

சந்திரிகா அம்மையாரின் மிக நெருங்கிய அமைச்சரவைச் சகாவாக இருந்தவர் எஸ். பி. திசநாயக்கா. ஐ. தே. கட்சிக்கு இடம்மாறியுள்ள இவர் அம்மையாரை ஒரு பொய்யர் என வர்ணித்துள்ளார்.

புத்திஜீவித் தலைவி என்று அம்மையார் போலியாகப் பெற்று வைத்திருந்த புகழுக்கு மேலும் பலம் சேர்த்தவர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கட்சி மாறிய இவர் அம்மையார் ஒரு சர்வாதிகாரி எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் இலண்டன் சென்றிருந்த அம்மையாரை செவ்விகண்ட பி. பி. சியின் அரசியல் விமர்சகச்செய்தியாளர் ஒருவர், அம்மையாரது அரசின் மனித உரிமைமீறல்களையும் - தமிழர்க்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கைகளையும அம்பலப்படுத்தும்வகையில் கேள்விகளை எழுப்பி அம்மையாரைத் திணறடித்தார். உண்மைகளை ஏற்கமறுக்கும் நேர்மையற்ற அரசியல்தலைவர் அவர் என உலகின்முன் நிறுவினார்.

சமாதான தேவதை என்றும்- மூன்றாம் உலக நாடுகளின் முன்னுதாரண ஆட்சியாளர் என்றும் உலக ஊடகங்களால் முன்னர் வர்ணிக்கப்பட்ட சந்திரிகா அம்மையாரின் பொற்காலம், இப்போது, முற்றுமுழுதாகவே அழிந்துவிட்டது.

அதற்குப்பதிலாக, குறுகிய சிந்தையுடைய தீவிர வலதுசாரி அரசியல்வாதி என்றும் - இனவெறிகொண்ட ஒரு இரும்புப்பெண்மணி என்றும் அம்மையாரை சர்வதேச சமூகம் நோக்கத் தொடங்கிவிட்டது.

கடந்த 50 வருடகாலமாக சிங்கதேசத்தின் அரியணையை அலங்கரித்துவந்த தமிழர்விரோத ஆட்சியாளர்களைப்போலவே சந்திரிகா அம்மையாரும் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தமுயன்ற ஒரு

> “1994 இல் சமாதானத்தின் பெயரால் அம்மையார் பதவிக்கு வந்தபோது இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அவர் அமைதி வழியில் அரசியல் தீர்வு காண்பார் என நம்பி, அவரின் ஆட்சிக்கு நேரடியாகவும் – மறைமுகமாகவும் ஆதரவு தெரிவித்து வந்த தமிழ்க்கட்சிகள் [ஈ. பி டி. பி. தவிர] இப்போது தமது தவறை உணர்ந்துள்ளன”

அபாயகரமான ஆட்சியாளராகவே உலகசமூகத்தால் இப்போது இனங்காணப்பட்டுள்ளார்.

அவரது ஏழுவருட ஆட்சியில் அம்மையாரின் சர்வாதிகாரப்போக்கையும் - தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களையும - மனித உரிமைகள் காலில்போட்டு மிதிக்கப்பட்டதையும்; போதும் போதும் எனுமளவிற்கு, உலகம கண்டுணர்ந்துவிட்டது.

தலைவர் பிரபாகரன் கூறியது போல சந்திரிகா அம்மையாரின் ஏழுவருட ஆட்சிதான் தமிழ்மக்கள் சந்தித்த மிகக்கொடியகாலமாகும.

இதுவரைகாலமும் அம்மையாரின் ஆட்சிமீது புலிகள் இயக்கமும்- தமிழ்மக்களும சுமத்திவந்த கடுமையான குற்றச்சாட்டுக்களை இப்போது அவரது அமைச்சரவைச்சகாக்களும்- உலக ஊடகவியலாளர்களும் - வெளிநாட்டு இராஜதந்திரிகளும சுமத்தத் தலைப்பட்டுவிட்டனர்.

1994 இல் சமாதானத்தின் பெயரால் அம்மையார் பதவிக்குவந்த போது இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அவர் அமைதிவழியில் அரசியல்தீர்வுகாண்பார் என நம்பி, அவரின ஆட்சிக்கு நேரடியாகவும்- மறைமுகமாகவும் ஆதரவு தெரிவித்து வந்த தமிழ்க்கட்சிகள் (ஈ.பி டி.பி தவிர) இப்போது தமது தவறை உணர்ந்துள்ளன.

அதன்விளைவாக, புலிகள் இயக்கத்தையும்- அதன் தீர்க்கதரிசனமான சொற்களையும் - செயல்களையும ஏற்றுக்கொண்டுள்ளனர். புலிகள் இயக்கம்தான் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றும ஏற்றுக்கொண்டுள்ளனர். தலைவர் பிரபாகரனை தமிழினத்தின் தேசியத் தலைவர் என்றும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சந்திரிகா அம்மையார்பற்றிய சர்வதேசசமூகத்தின் மனமாற்றமும் - தமிழ் அரசியல்கட்சிகளின் புதிய நிலைப்பாடும் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு மாபெரும் அரசியல் வெற்றியைப் பெற்றுக்கொடுத்துள்ளன.

25 வருடகால புலிகளின் ஆயுதப்போராட்ட வரலாற்றில் இது ஒரு மாபெரும் திருப்புமுனை எனக் கொள்ளலாம்.

இனப்படுகொலையை நோக்காகக் கொண்ட இனவெறி அரசுக்கெதிராக ஒரு மக்கள் போராட்டத்தை புலிகள் இயக்கம நடாத்திவருகின்றது என்ற உண்மையை, இப்போது, உலகசமூகம் உணரத்தொடங்கி விட்டது.

அம்மையாரின் ஏழுவருட ஆட்சியில் சமாதானத்திற்கென புலிகள் இயக்கம் வழங்கிய இரண்டு பெரிய வாய்ப்புகளை (1994 இல், 2001 இல்) வேண்டுமென்றே நிராகரித்த அம்மையார் இனப்போரை கூர்மையடையவைத்து இலங்கைத்தீவை - என்றுமில்லாத அளவுக்கு - ஆரத்தக் களறியுமாக்கியுள்ளார்.

புலிகள் இயக்கத்தை சமாதானத்தின விரோதிகள் என்றும், போர்வெறியர்கள் என்றும் உலகிற்குக் கூறிவந்த அம்மையார் இப்போது அதே குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி கீர்த்தியிழந்ததொரு ஆட்சியாளராகத் திகழ்கின்றார்.

சர்வதேச அரசுகள் மத்தியில் சந்திரிகா அரசாங்கம் சந்தித்துள்ள இத்தகைய அரசியல்கீர்த்தியிழப்பு சிறிலங்கா அரசுக்கு பொருண்மிய நெருக்கடிகளையும் கொடுத்துள்ளது.

இத்தகைய அரசியல்சூழலிலேயே சிறிலங்கா நாடாளுமன்றிற்கான பொதுத்தேர்தலும் நடைபெறவுள்ளது.

போர்ச்செலவுக்கு பொருண்மிய உதவிகள் கிடையாது என்ற உதவி வழங்கும் நாடுகளின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் அம்மையாரின் தலைமையிலான பொ. ஐ. முன்னணி தனது தேர்தல் பரப்புரையில் தாம் ஆட்சி அமைத்தால் புலிகளுக்கெதிரான போர் தொடரும் என்றே கூறிவருகின்றது.



மூன்றாம்தரப்பு மத்தியத்துவத்துடன் அமைதிப்பேச்சுக்களை நடாத்த புலிகள்இயக்கம் தயாராக இருக்கின்றபோதும் அதற்கான அரசியல் முன்னேற்பாடுகளைச்செய்து ஆக்கபூர்வமானவகையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட சந்திரிகா அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகின்றது.

இந்தநிலையில், தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுதொடர்பாக புலிகள்இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடே மிகச்சரியான வழிமுறை என்ற உண்மையை இப்போது அனைத்துத்தரப்பினரும் உணர்ந்துவிட்டனர்.

தமிழ்மக்களின் வாக்குகளைப் பெறவேண்டுமாயின இந்த அரசியல் யதார்த்தத்தை நாமும் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினுள் தமிழ் அரசியல் கட்சிகளும் வந்துள்ளன.

— எல்லாளன் —

இதன்வெளிப்பாடே நான்கு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தேர்தல்கூட்டணியை உருவாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டதாகும்.

இந்த அரசியல் கூட்டணியானது தமிழரின் ஏக பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளதும்; புலிகள் இயக்கம் மீது சிங்கள அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று கோரியிருப்பதும்; புலிகளுடன் மட்டுமே சிங்கள அரசு பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டும் என்று பிரகடனப்படுத்தியிருப்பதும் விடுதலைப் போராட்டத்தின் அரசியல் யதார்த்தத்தை உலக சமூகத்திற்கு தெட்டத் தெளிவாக்கியுள்ளன. ○

# ஐந்துவருட போர்நிலைமை மாறுகின்றது

## ஒருமுகப்படுத்தல் காலாவதி; பரவலாக்கல் பலவீனம்; மாற்றுவழியின்றி படைத்தரப்பு

இருபக்கப்போர் அமைதி பல எதிர்பார்ப்புக்களையும், சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பயிருக்கிறது. யுத்தத்தின் இன்றையநிலை என்ன? இதுவே இன்று அறிவதற்கு ஆர்வம் மிக்க செய்தியாக உள்ளது.

முழுமையான போர் நிலைமையில் இப்பொழுது சடுதியான மாற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது. அது இன்னும் செயல் பூர்வமாக வெளிப்படாததினால் சாதாரண மக்களால் விளங்கப்பட முடியாததான சூக்குமமான மாற்றமாக நிகழ்ந்து விட்டிருக்கிறது. இதுவே எதிரித்தரப்பின் போர்க்கள அமைதிக்கான மர்மம்.

இராணுவத்தரப்பு, நிகழந்துவிட்ட இந்த மாற்றத்தை எதிர்கொள்வது எவ்வாறென்ற வினாவுக்குள் மூழ்கிப்போய் விடைதேட முயன்று கொண்டிருக்கிறது. மாற்றுவழிகள பற்றி விவாதிக்கவும், பரிசீலிக்கவும் முயற்சிகள எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், நிகழ்ந்துவிட்ட மாற்றம் திண்ணியமானதும் தீர்மானகரமானதுமான மாற்றம் என்பதே இங்கு நாம் விளங்கவேண்டியது.

முழுமையான யுத்த நிலைமை என்பது போரிடும் இருதரப்பும் கொண்டுள்ள பலம், பலவீனம், அடுத்தகட்டப்போர் நடவடிக்கைக்கான இருதரப்பினதும் முஸ்தீபுகள், சமகாலப்போர் நடவடிக்கைகளின் விளைதிறன்கள என்பவற்றின் மொத்தமான மதிப்பீடாகும். பகுதிகளாக அமைந்த அனைத்துப் போர் நடவடிக்கைகளினதும் கூட்டு மதிப்பீடாகவே முழுமையான யுத்தநிலைமை கணிப்பீடு செய்யப்படுகிறது.

ஆயினும் யுத்தத்தில் சில சந்தர்ப்பங்களில் ஒரு பகுதிப் போர்நடவடிக்கையே முழுமையான யுத்த நிலைமையைத் தீர்மானிக்கவல்லதாயும், அதன் மூலம் யுத்தத்தின பின்னணியாகவுள்ள அரசியலைத் தீர்மானிக்கவல்லதாயும் மாறுவதுண்டு. அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் பல பகுதிப்போர் நடவடிக்கைகள் யுத்தத்தின் முழுநிலைமையைப் பாதிக்காததாக, செல்வாக்குச் செலுத்த முடியாததாக அமைவதுண்டு.

96 இல் கண்டிவீதியை (A9) கைப்பற்றுவதற்கான 'சத்ஜெய', 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கைகள தொடங்கப்பட்டதிலிருந்து இவ்வாண்டின் நடுப்பகுதிவரை வன்னிச்சமர்க்களமே முழுமையான யுத்த நிலைமையை தீர்மானிக்க வல்லதான தீர்க்கமான போர் முனையாக விளங்கியது.

யுத்தத்தில் எதிர்காலத்தைத் தீர்மானிக்கவல்ல மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாக வன்னிச்சமர்க்களம் விளங்கியதனாலும், இதனால் இருதரப்பு போர் வலுக்களும் வன்னியிலேயே மையப்படுத்தப்பட்டிருந்ததனாலும், வன்னிப்போர்முனை முழுமையான யுத்த நிலைமையை தீர்மானிக்கும் தீர்க்கமான பகுதியாக மாறியமை யதார்த்தமானதே.

இதனால் ஏற்பட்ட நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு இந்த நிலைமையை மாற்ற இருதரப்பும் எடுத்த பற பகுதிப் போர் நடவடிக்கைக்கான எத்தனங்கள் முழுமையான யுத்த நிலைமையைப் பாதிக்கவில்லை. அல்லது அவ்வாறு அமையக்கூடியவாறு இருதரப்பாலும் பறபோர் முனைகளை தீர்க்கமாக முன்னெடுக்க முடியவில்லை. வன்னிச்சமர்க்களத்தின் மூலோபாய முக்கியத்துவத்தினால் பிறவற்றுக்கான காத்திரத்தன்மையும் அற்றுப்போயிருந்தது.

இத்தகைய நிலையில் 'ஜெயசிக்குறுய்' மாங்குளம் வரை முன்னேறியபோது யுத்தத்தில். இராணுவத்தரப்பு மேலோங்கியிருந்தான கணிப்பு இருந்தது. அதுவே ஓயாத அலைகள -02 இல் கேள்விக்குள்ளாகிவிட, புலிகள் நடத்திய ஓயாத அலைகள் -03 உடன் புலிகளின் கை யுத்தத்தில் மேலோங்கியது. மேலும், புலிகளின் கடல்சார் நடவடிக்கைகளை திட்ட வட்டமாக தடுத்து நிறுத்துவதனூடாக புலிகளின் போர் வலுவைக் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க முடியும் என்றும் நம்பியது.

இவற்றின் மூலம் வன்னியிலிருந்து போர் விரிவடையாதவாறு தமது தற்காப்பை உறுதி செய்வதுடன், மேற்கொண்டு திட்டமிடவும். செயற்படவும் முடியும் என்ற நம்பிக்கையில் இராணுவம் செயலில் இறங்கியது.

சாலையில் இருந்து அளம்பில் வரையான கடற்பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக புலிகளின் கடல்சார் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் கரையை அண்டிய கடற்பிரதேசத்தில் நிரந்தரமாக போர்ப்பீரங்கி கடற்கலங்களையும், அதிவேகப் பீரங்கி விசைப்படகுகளையும் நிறுத்தியது-இது ஏறத்தாழ கடலில் ஒருதொடர் காவலரண் வரிசையை உருவாக்கியது போன்றது- கடற்புலிகளுக்கு எதிரான இந்நடவடிக்கைக்கு 'வர்ணகிரண' நடவடிக்கை என்று கடற்படை பெயரிட்டது.

இந்த 'வர்ணகிரண' வியூகம் அமைத்ததன் பின்பு புலிகள் உயரக்கடலேற முடியாது என்ற நம்பிக்கையுடன்



நடவடிக்கைத் திட்டமிடலில் தேசியத் தலைவருடன் கேணல் சூசை வலதுபுறம் கடற்புலி துணைத்தளபதி லெப். கேணல் இரும்பொறை

விட்டமை இட்டவட்டமாக விளங்கப்பட்டிருந்தது.

ஆயினும், யுத்தத்தின் முழுநிலைமையை வன்னிப்போர் முனையே தீர்மானிக்கும் நிலையிலிருந்து மாற்றம் நிகழக்கூடியவாறான சூழல் அமையவில்லை.

புலிகளுக்கு தீர்க்கமான பிறபகுதிப் போர்முனையைத் திறப்பதற்கு ஆளணி வலுப் போதாமை இருப்பதாக இராணுவம் கணித்தது. அதே நேரம் வன்னியில் புலிகளால் தொடங்கப்படக்கூடிய போர் முனைகளை ஊகித்து அதை எதிர்கொள்வதற்காக இராணுவம் தனது போர்வலுக்களை, இப்பகுதிகளை நோக்கி ஒரு முகப்படுத்

படைத்தரப்பு இருக்க 16-07-2001 அன்று கடற்புலிகள் பருத்தித்துறை உயரக்கடலில் வந்து கொண்டிருந்த கப்பல் தொடரணிமீது ஒரு முற்றுகைத் தாக்குதலை நிகழ்த்தினர். அந்தக்கடற் பெருஞ்சமரில்இரு 'டோறா'க்களை மூழ்கடித்தனர். துருப்புக்கள் ஏற்றி வந்த கப்பலில் மக்களும் ஏற்றப்பட்டுள்ளனர் என்ற சந்தேகத்தில் இறுதியில் துருப்புக்கப்பல் மூழ்கடிக்கப்படாது விடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடலில் கடற்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களை கடற்படை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. 20-10-2001 அன்று பருத்தித்துறை கடற்பரப்பில் இராணுவ விநியோகத்திற்கான எண்ணெய்க்கப்பல் அதன் பாதுகாப்பு வியூகங்களை உடைத்தெறிந்து முன்னேறிய கடற்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. இந்த இருபெருந் தாக்குதல் நடவடிக்கைகளுக்கிடையில் ஐந்து கடற்சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன.

இந்தத் தாக்குதல்களால் படைத்தரப்பு அதிர்ந்து போயுள்ளது. காரணம் புலிகள் 'வர்ணகிரண' நடவடிக்கை வியூகத்தையே உடைத்து முன்னேறுகின்றனர் என்பது ஒன்று. ஆழ்கடலில் செல்லும் கப்பல் தொடரணி மீது அதன் பாதுகாப்பு வியூகங்களைப் பிளந்து வெற்றிகரமாக தாக்குதலை நடத்தி தளம் திரும்ப முடிவதென்பது ஆழ்கடல்ச்சமருக்கு கடற்புலிகள் தமது கலங்களையும், போர்வலுவையும் தயார்படுத்தி அதில் காலூன்றும் வலுவிற்கு வளர்ந்து வருகின்றனர் என்பது மற்றொன்று.

## பிரபுத்திரன்

மேலும், இதனால் யாழ்ப்பாண இராணுவ நிலைகொள்ளல் எத்தகைய விளைவைப் பெற நேரும் என்ற வலுவான கேள்வி இன்னொரு புறம். இப்படி வன்னிச்சமர்க்களத்தில் புலிகளின் வலுவைக் கட்டுப்படுத்த எடுத்த 'வர்ணகிரண' கடல் நடவடிக்கை புலிகளின் ஆழ்கடல் பிரவேசத்தை தடுத்து நிறுத்தமுடியாமல் இத்தகைய கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

அடுத்தது வன்னிச்சமர்க்களத்திற்கு அப்பால் புலிகளின் தலைமைத்துவம் எடுத்த போருக்கான நடவடிக்கை.

மட்டு-அம்பாறை பகுதியில் பெரும்போர் நடவடிக்கைக்கான முன் முயற்சிகள் வலுவாகப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கிலான புதிய போராளிகளை அணிதிரட்டியமையும் எல்லைப்படை, கிராமப் படை என்ற மக்கள் படைக் கட்டுமானங்களை உருவாக்கியமையும் மேலும் பெற்றோர்களே தமது பிள்ளைகளை தமது விடுவிப்பிற்காகப் போரில் இணைத்து வருகின்றமையும் ஒரு பெரும் போருக்கான அரசியல் எழுச்சியாகவும், அதேநேரம் பெரும்போர் நடவடிக்கைக்கான புலிகளின் தயார்படுத்தலாகவும் படைத்தரப்பு இதைக் கணிக்கிறது.

இவ்வாறே திருகோணமலையிலும் படைத்திரட்டலுடன் தமது சுதந்திரச் செயற்பாட்டுக்கான வலுவான ஒரு தளப்பிரதேசத்தை புலிகள தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

'அக்கினிக்கீல' (தீச்சுவாலை) நடவடிக்கை அடைந்த பாரதூரமான தோல்வி வன்னியில் புலிகள் ஓர் போர் நடவடிக்கைக்கான பலத்தையும், வளத்தையும் கொண்டுள்ளனர் என்பதைப் படையினருக்கு வெளிப்படுத்தியது. இப்பொழுது இது மேலும் வலுப்பெற்றிருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இவ்வாறான நிலைமை. வன்னிச்சமர்க்களமே முழுமையான யுத்த நிலைமையைத் .தீர்மானிக்கவல்லதான சூழலிலிருந்து புலிகளின் பலமுனைப் போர் வலுவை மதிப்பிடவும், பல முனைகளில் போரை எதிர்பார்க்கவும் வேண்டியதான சூழலை இராணுவத்திற்கு தோற்றுவித்துள்ளது.

கடந்த ஐந்து வருடமாக இருந்து வந்த யுத்தநிலைமையில் இப்பொழுது இத்தகையதொரு திடீர்மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

வன்னிச்சமர்முனைக்கு அப்பால் ஒரு தீர்க்கமான போர் முனையை இரு தரப்பாலும் திறக்கமுடியாதிருந்த சூழலில், புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்பார்க்கக் கூடிய போர்முனையில் படைவலுக்களை ஒருமுகப்படுத்துவதன் மூலம் வன்னியில் தற்காப்பை உறுதிப்படுத்தப் படைத்தரப்பு முயன்றது. மேலும் புலிகளின் கடல்சார் நடவடிக்கையை கட்டுப்படுத்துவதன் மூலம் புலிகளின் போர்வலுவை மட்டுப்படுத்தவும், தமது தற்காப்பை மேலும் உறுதிப்படுத்தவும் முடியுமென்று படைத்தரப்பு நம்பியிருந்தது.

இன்று கடல்சார் நடவடிக்கை (வர்ணகிரண) கைமீறிப்போவது மட்டுமல்ல அதுவே யாழ்ப்பாண நிலைகொள்ளலுக்கான அச்சுறுத்தலையும் வலுவாக்கியிருக்கிறது. மேலும், புலிகளின் பல்முனைப் போர்ப்பலம் இராணுவத்தினரின் படைவலுவை ஒருங்கிணைக்கும் திட்டத்திற்குப் பதிலாக வலுவைப் பரவலாக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் அவர்களை தள்ளிவிட்டுள்ளது.

இத்தகைய பரவலாக்கல், திட்டவட்டமாக தற்காப்பு பலவீனத்தை உருவாக்குமே தவிர, எந்த விதத்திலும் அது தீர்வாக அமையாது என்பதைப் படைத்தரப்பு உணர்ந்திருக்கிறது.

யுத்த நிலைமையில் ஏற்பட்டிருக்கின்ற இத்தகைய மாற்றம் செயல்பூர்வமாகும் நாளையெண்ணி படைத்தரப்பு மிகுந்த அச்சம் கொண்டிருப்பதாக தென்னிலங்கைப் பத்திரிகைகள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதே இராணுவத்தரப்பு எதிர்நோக்கியுள்ள இன்றைய சவாலகும். அதற்கு போரில் அமைதியும், அவகாசமும் அவர்களுக்குத் தேவைப்படலாம்.

மாற்று வழிகள் பற்றி படைத்தரப்பு தீவிரமாக ஆராய்ந்தும், பரிசீலித்தும் வருகிறது. புலிகளின் தளப்பிரதேசத்தில் ஆழ ஊடுருவித்தாக்குவதன் மூலம் புலிகளின் படைவலுவை தற்காப்பினுள் தேக்க முடியுமா என்ற முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும் மாற்றம திட்டவட்டமானதும் தீர்மானகரமானதுமான மாற்றமாக நிகழ்ந்து வருகிறது என்பதை அவர்கள உணரத்தவறவில்லை.

இது தமிழ்மக்களின் மகிழ்ச்சிக்கு மட்டுமல்ல, எழுச்சிக்கும் உரிய செய்தியல்லவா!

# உருக்கினுள் உறைந்த பனிமலை

அவரொரு வித்தியாசமான மனிதர். எப்போதுமே சீரான, நேர்த்தியான தோற்றத்துடனே தோன்றுவார். சீராக வகிடெடுத்து அழுந்த வாரப்பட்ட தலையும், பரந்து தெளிவாக காணப்படும் முகத்தில் நகைப்பும், வியப்பும், கூர்மையும் காண்பிக்கும் கண்களும் இறுக கால்பதித்து நிலமதிர நடக்கும் கனத்த உருவமும் அசாதாரணமனிதரிவர் என்கிற பதிவை எவரிடத்திலும் ஏற்படுத்தும். எப்பொழுது சந்திக்க நேர்ந்தாலும் தோளை குலுக்கிக் குலுக்கி தலைசரித்து இலேசான செருமலுடன் கண்களை நேராகப் பார்த்து பயனுள்ள உரையாடலொன்றிற்கு அவர் ஆயத்தமாகும் தோற்றம் என்றும் எம் மனதில் நிழலாடும். எந்தவொரு விடயமானாலும் தனது உறுதியான நிலைப்பாடுடனும், மேலும் விபரங்களை அறியும் நோக்குடனும் அவர் நடத்தும் உரையாடல்கள் எவர் காதிலும் ஒலித்தவண்ணமேயிருக்கும்.

அன்று திலீபனின் நினைவு நாளன்று அதிர்ந்த வெடியோசை கேணல் சங்கரை எம்மிடமிருந்து பறித்துவிட்டது என்றறிந்தபோது துயரத்துடன் வெறுமையுணர்வும் மிகுந்தது. இவ்வெறுமையுணர்வு இதுவரை எம்மால் உணரப்படாதது. இன்று மாவீரர் கேணல் சங்கரின் இழப்பென்பது எமக்கு அறிவின் வறுமை ஆளுமையின் வெறுமை என்றாகிவிட்டது. மனம் நெடுமூச்செறிகின்றது.

மாவீரர் கேணல் சங்கர் பன்முகப்பரிமாண ஆற்றல்கொண்ட அபூர்வமனிதர். இவ்வுலகின் தனித்தனியான ஆற்றல்களைக் கொண்டவர்களையே பொதுவில் நாமறிவோம். ஆனால் பற்பல ஆற்றல்கள் ஒரு மனிதரிடம் பொதிந்திருப்பவை காண்பதரிது. ஒருபுறத்தில் பார்த்தால் நவீன விஞ்ஞானயுலகின் தொழிநுட்ப பொறிமுறையறிந்த விற்பன்னன்; மறுபுறத்தில் விடுதலை, வரலாறு, அரசியல், சர்வதேச நடப்புக்களை ஆழமாக உணர்ந்த அரசியலாளன். ஒருபுறத்தில் தமிழீழ வானூர்தி துறையின் முதல்வன். கடற்புலிகளின் துணைவன்; மறுபுறத்தில் காடுசார் போர்முறையின் ஆற்றலாளன். காட்டின் நாயகனாகவும் நகரத்தின் நாகரிக கனவானாகவும் அவரால் இருந்திடமுடியும்.

புத்துலகின்வேகமான மாற்றங்களை உள்வாங்கி சர்வதேச நடப்புக்களின் மிகப் பிந்திய நிலைமைகளோடு தன்னையெப்போதும் இணைத்துக்கொள்வதில் ஆர்வமுள்ளவர். வேகமும் வீச்சும பரபரப்பும் கொண்ட இளமையை படிப்படியாக விரிவு செய்து தனது மனப்பரப்பை விசாலித்து பரிவு, பொறுமை, பக்குவம் கொண்டதொரு முதிர்ச்சி நிலையாக அவர் மாற்றிக்கொண்டது ஒரு விடுதலைப் போராளி படிப்படியாக வளர்ச்சிகண்டு அடையவேண்டிய நிலையை எமக்குக் காட்டுகின்றது.

எண்பதுகள் தொட்டு அவரது வாழ்வு அல்லது வரலாறு விடுதலைப் போராட்டத்தோடு இரண்டறக் கலந்ததாகிவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் செல்நெறிப்போக்கினை நெறிப்படுத்தும் தலைவர் உடனிருந்து, அவர் மனம்புரிந்து, கருத்துப்பரிமாறி, கலகலப்பாக்கி அன்றிலிருந்து உயிர் பறிக்கப்பட்ட அன்றைய நாள்வரை இடைவிடாது இயங்கிய பெருமை அவருக்குரியது. அவரது வரலாற்றின் சிறப்பான பக்கங்களாக கருதப்படும் மணலாற்று காலகட்டம் அவரது ஆளுமையை உணர்த்திநிற்கின்றது. அவரது அறிவியல், வனத்தின் இரகசியங்களை போராளிகளுக்கு கற்றுக்கொடுத்து வனவாழ்க்கைக்கு அவர்களை இணக்கியது. அவரது இறுக்கமான ஒழுக்கக் கட்டுப்பாடு

வனத்தில் மிக அருந்தலாகக் கிடைக்கும் உணவு, குடிநீர் போன்றவற்றை சீராக பங்கிட்டு, அவரது உன்னிப்பான போரட்டத்தில் எதிர்நீச்சல்போட்டு தங்களை வளர்த்த அருமைத் தாயாரின் அறிவு, ஆற்றல், துணிவு, வாசிக்கும் ஆர்வம் போன்ற இயல்புகளை உள்வாங்கி வளர்ந்த கேணல் சங்கர் போராளிகளின் குடும்பநலன், விழுப்புண்பட்டோர் நலன், மணமுடிக்க ஆயத்தமாவோர், மணமுடித்து மகப்பேற்றினை எதிர்பார்ப்போர், மகவினைப் பெற்றெடுத்தோர் எல்லோருடனும் 'தாயன்பினை' காட்டி அன்புடன் உறவாடினார். அவரது நெஞ்சத்தறையில் ஒவ்வொரு போராளிக்கும் தனித்தனிப் பதிவுகளை பேணிவந்தார்.

ஆண் சகோதரர்களுடன் வாழ்ந்த அவர் இளம் சிட்டுக்களாக



மணலாற்றுக் காட்டில் தலைவருடன் கேணல் சங்கர்

கவனப் பார்வை விடப்படும் சிறுதவறுகள் பெருந்தவறுகளாகி அழிவுகளை ஏற்படுத்தாமல் தடுத்து - இயக்கத்தின் அதிநெருக்கடியான காலகட்டமொன்றிலிருந்து தலைமையைப் பேணி மீள உதவிற்று. அன்று அவர் தம்மை ''குட்டி, குட்டி'' வளர்த்த கதையை அன்று அவருடன் இயங்கிய போராளிகள் சொல்லிச் சொல்லி மாய்கின்றார்கள்.

இவ்வாறான இவ்வரசியல், இராணுவ, அறிவியல் பக்கங்களைவிட அவரது 'மனித உறவாடல்கள்' மிக வேறுபட்டதொரு தளத்தில் செயற்பட்டமை அதிசயிக்கத்தக்கது. பொதுவில் இத்தகைய ஆற்றல்கள்பெற்றோர் வேலைப்பழு, இரகசியம் காத்தல் மனப்போக்கு போன்ற ஏதாவதொரு காரணத்தால் ''தனிமைப்பட்டிருப்பது'' வழமை. ஆனால் கேணல் சங்கரோ மனித உறவுகளை சீராக தொடர்ச்சியாகப் பேணுவதில் பெரும் கவனம் செலுத்தினார். வன்னியின் மூத்தோர், அனுபவமிக்க கமக்காரர், பல்வேறு துறைசார்ந்தோர், கல்வியாளர், உயரதிகாரிகள் எல்லோருடனும் 'முறைவைத்து' நேர்த்தியான உறவினைப் பேணிவந்தார். இளவயதில் வாழ்க்கைப்

சிறகடிக்கும் பெண்குழந்தைகளைக் கண்டால் தானும் குழந்தையாகிவிடுவார். இயற்கையின் நண்பனவர். தாவரங்களோடும் அவருக்கு உறவிருந்தது. அவரது பண்ணைகளில் அவர்கையால் நட்டு வளர்த்த மரங்கள் என்றும் அவர்பெயர் சொல்லும்.

இத்தகையதொரு மாவீரனை எதிரி எம்மிடமிருந்து பறித்துவிட்டான். ஆனால் எம்மிடம் செறியவைக்கப்பட்டுள்ள அவரது நினைவுகளை எவராலும் பறிக்க முடியாது. அவரது ஆளுமையின் ஒரு பகுதியேனும் அவரால் வளர்க்கப்பட்டோரிடம் தங்கியிருப்பதை எவராலும் இல்லாமற் செய்துவிடவும் முடியாது. இம்மண்ணின் விடிவிற்கான முழுமையான அர்ப்பணம் அவரது வாழ்வு; எல்லார்க்கும் கிட்டிடாத பேறு அவரது வரலாறு. எம் மண்ணில் மலர்ந்திடும் மலர்களிலும் பிறந்திடும் குழந்தைச் செல்வங்களிலும் அவரது அமைதியான புன்முறுவல்பூத்த முகம் தெரிவதை இனியென்றும் நாம் காண்போம்.

○

க. வே. பாலகுமாரன்



கேணல் சங்கர்

''ஒரு புறத்தில் தமிழீழ வானூர்தி துறையின் முதல்வன், கடற்புலிகளின் துணைவன்; மறுபுறத்தில் காடுசார் போர்முறையின ஆற்றலாளன். காட்டின் நாயகனாகவும் நகரத்தின் நாகரிக கனவானாகவும் அவரால் இருந்திடமுடியும்.''

# சாவுக்குள் உழைத்த வீரம்

துப்பாக்கி ரவையின் வேகத்தைப்போல எங்கள் எதிர்பார்ப்புகள் எல்லாமே கைநழுவிப்போய்க் கொண்டிருந்தன. 1998 சுதந்திர நாளுக்குக் கிளிநொச்சியிலிருந்து கண்டி வீதியால் தலதா மாளிகைக்குப் பேருந்து வரும் என சிங்களத்து ஜெனரல் விடுத்த சவாலுக்கு சாட்டையடியாக, கிளிநொச்சித் தளம் மீதான பாய்ச்சலுக்காக தலைவர் இட்ட உத்தரவை நிறைவேற்ற முடியாதவாறு தளத்தினுள் முன்னேறிய எமது போராளிகளை வீழ்த்தியபடி எதிரி அத்தனை விரைவாய் முன்னேறிக்கொண்டிருந்தான்.

எதிரிக்காக எடுத்த சாட்டையடி எங்கள் முதுகுகளிலேயே விழுந்துவிடுமோ? எதிரி கொடியேற்றும் நாளில் எங்கள் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறந்து விடுமா? அர்த்தமற்ற உயிரிழப்புக்களுடன் நாம் தளம் திரும்பநேருமா? தலைவன் இட்ட ஆணையை வீணேபோகவிட்டு வெறுங்கையுடன் திரும்பப்போகிறோமா? அந்த முடிவுகள் எதையுமே ஏற்றுக்கொள்ள எங்கள் மனம் மறுத்தது. ஆனாலும், யதார்த்தம் எங்கள் பிடரிமயிர் பிடித்துலுப்பியது. வக்கற்று, வழியற்று, மனம் வெப்பியாரத்தில் உழன்றது. எல்லா அலைவரிசைகளையும் வேகமாய் நோட்டமிட்டபடி அங்குமிங்கும் ஏதோ ஒரு நம்பிக்கைச் செய்திக்காய் தவித்தபடியிருந்தோம்.

மூத்த தளபதிகள் நிலைமையை அவதானித்தவாறு தொலைத்தொடர்புக் கருவியின் ஒலிகளைத் தமது காதுகளுள் உள்வாங்கிக்கொண்டிருந்தனர். நிசப்தத்தைத்தவிர வேறெதுவும் அங்கு நிலவவில்லை. ஓர் அலைவரிசையில் கம்பீரமான கட்டளைக்குரல் நிதானமாய், நேர்த்தியாய், உற்சாகமாய் களத்தைத் தன் கையிற்குள் வைத்திருப்பதை உணர்த்துமாறு ஒலித்துக் கொண்டிருந்தது. எதிரியின் பலம்வாய்ந்த முன்னரண்களையெல்லாம் வீழ்த்தியபடி, முறியடிக்க வந்த எதிரிகளைச் சாவுக்காக அனுப்பியபடி தனக்குத் தரப்பட்ட பகுதிகளைக் கடந்தும் ஓர் அணி முன்னேறிக்கொண்டிருப்பதை அந்தக் கட்டளைகள் தெளிவாக உணர்த்தின. அந்தக்கட்டளைக்குரல் தந்த உற்சாகத்திலிருந்து விடுபட மனம் மறுத்தது.

''யாரடா... யார்... அந்த இடத்தில நிக்கறதெண்டு பாருங்கோ'' என்று ஒரு தளபதி கேட்க, மூத்த தளபதியொருவர், ''அந்த 'மைப்'பை எடு, அந்த இடம் எதெண்டு பார்''

''அது சேகரின்ர இடம், சேகர் பிடிச்சுக்கொண்டு போறான். பயப்படத் தேவையில்லை. சேகர் விடமாட்டான்.''

அந்தச்சமரோடு சம்பந்தப்படாவிட்டாலும் அந்தச் சமரை அவதானித்துக்கொண்டிருந்த தளபதிகள் நம்பிக்கையுடன் உற்சாகமடைந்தார்கள். தளபதி சேகருடைய வழிநடத்தலை அன்றுதான் முதன் முதலில் நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.


சேகர் பிடித்த காவலரண் பகுதிகளை மீளக்கைப்பற்ற எதிரி கடுமையாக முயன்றான். ஏனைய பகுதிகளை நாம் இழந்துவிட்டபோதும் சேகர் தனக்குத் தரப்பட்ட பகுதிக்கு அப்பாலும் தனது கட்டளையின் கீழ் எதிரிப்பகுதியைக் கைப்பற்றியிருந்தான். கிளிநொச்சி நகரின் மத்திய பகுதிவரை கைப்பற்றப்பட்ட எதார்த்தளத்தைத் தக்கவைக்கவென அணிகளை நிலைப்படுத்தியபோது எதிரிக்கும் எமக்குமிடையிலான சண்டை வலுப்பெற்றது. விடாப்பிடியான எதிரியின் தீர்மானகரமான சண்டையைப் போர்க்களம் கண்டது. ஒன்பது தடவை சேகரிடம் தோற்றுப்போன எதிரி, பத்தாம் முறையும் முனனேறி மூக்குடைபட்டுப் போனான். கிளிநொச்சியிலிருந்து பேருந்து விட சவால்விட்ட எதிரிக்கு, எங்கள் நிலத்தில் அவலத்தை விதைத்த எதிரிக்கு, எங்கள் மண்ணில் நின்று தன் சுதந்திரக் கொடியேற்ற அனுமதிக்காத தலைவரின் ஆணையை நிறைவேற்றி நிலமட்டு ஆங்கே எதிரிக்கு மரணபயத்தை விரித்தான் தளபதி சேகர். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாக அவனை நியமித்த தலைவர் அவர்களுக்கு சேகர் தனது ஆளுமையை நிரூபித்த முதற்சமர் இதுதான்.

இதுவே கிளிநொச்சியை முற்றாக மீட்டெடுப்பதற்கான 'ஓயாத அலைகள் -02' நடவடிக்கையில், கடுமையானதெனக் கருதப்பட்ட பகுதிக்கான அணிகளுக்கு அவன் கட்டளைத் தளபதியாக தலைவரால் நியமிக்கப்படுவதற்குக் காரணமாகியது. அச்சமரில் எதிரியின் வலுமிக்க போரணியை, தளத்தின் மையப்பகுதியின் திறவுகோலாக அமைந்த அந்தப் பகுதியை எதிர்கொண்டு எதிரியின் தீர்மானகரமான முறியடிப்பை மோதியுடைத்து வெற்றியை எமதாக்கியவன் சேகர். இப்பகுதியில் போரிட்டுத்தோற்ற எதிரிப்படைக் கொமாண்டருக்கு எதிரியின் கட்டளைப்பீடம் வீரவிருது கொடுத்துக்கௌரவித்தது எனின், சேகர் எதிர்கொண்ட சண்டையின் காத்திரத்தைப் புரிந்துகொள்ளுங்களேன்!

இந்த வீரத்தளபதியை வெறும் ஒற்றைச் செய்தியில் ''இழந்துபோனோம்'' என அறிந்த போது அதை ஜீரணிக்கமுடியாத துயரத்தின்கொடுமையை நீங்கள் புரிந்துகொள்வீர்களா?

என்றும் மரணத்துள் வாழ்ந்தவன். மரணத்திற்கு அஞ்சாதவன். ஆனால், மரணத்தை விரும்பாத இவன்மனம் எதையோ சாதிக்கத் துடித்திருப்பதை எல்லோருமல்ல, அவனை அறிந்தவர்கள் அறிவர். இதை அறிந்தவர்களால் இலகுவில் இந்தச் சாவைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. இவனுக்கான சந்தர்ப்பங்கள் நீண்டிருந்தால், மாளும் பகையின் பின்னாலும், மீளும் எம் நிலங்களின் பின்னாலும் இவன் இருந்திருப்பான். தலைவன் சுட்டும் திசையெங்கும் இவன் புலிக்கொடி நாட்டிப் பெருமை சேர்த்திருப்பான். இன்று இவன்மீதல்லவா புலிக்கொடி போர்த்தி புதைகுழிநோக்கி எடுத்துச்செல்கிறோம்.

''இந்த வீரத் தளபதியை வெறும் ஒற்றைச் செய்தியில் 'இழந்துபோனோம்' என அறிந்த போது அதை ஜீரணிக்கமுடியாத துயரத்தின் கொடுமையை நீங்கள் புரிந்துகொள்வீர்களா?''



பத்து வருடத்தின்முன் மாங்குளம் முகாம் தகர்ப்பின்போது, அப்போதுதான் பயிற்சி முடித்து வந்திருந்த மெலலிய உருவங்கொண்ட, தலை சாய்த்து இழுத்திருந்த, கறுப்பை அண்டிய பொதுநிறமான அந்தப் பதினைந்து வயதுப் பெடியன் அந்தப் போர்க்களத்தின் மத்தியில் நின்று காயப்பட்ட வீரர்களைச் சுமந்து சென்று கொண்டிருந்தான். இதுதான் போராளி என்ற பெருமைமிக்க வாழ்வில் இந்தச் 'சின்னப்பெடியன்' கண்ட முதற்களம்.

ஒன்பது வருடங்களின்பின், தென்முனையில் எதிரி மீண்டும் மாங்குளம்வரை ஆக்கிரமித்திருந்தபோது ஓங்கிப் பிரவாகமென எழுந்தது 'ஓயாத அலைகள்-03'' அம்பகாமத்தில் உடைப்பை நிகழ்த்தி ஒலுமடுத் தளத்தை வீழ்த்தி, கரிப்பட்ட முறிப்பை வெற்றிகொண்டு, கனகராஜன்குளம் கட்டளைத் தலைமையகம் தோற்கடிக்கப்பட மாங்குளம் எமது கைகளுக்கு மீண்டது. இந்தச் சமரில் இதைச்சாதிக்கக் களத்தில் தலைமை தாங்கிக்கொண்டிருந்த தளபதி அன்று மாங்குளம் முகாம் தகர்ப்பில் காயப்பட்ட போராளிகளைச் சுமந்துசென்றுகொண்டிருந்த அதே சின்னப் பெடியன் சேகர்தான். இப்போது புரிந்து கொள்கிறீர்களா? இந்த உயர்பணியை ஆற்ற இந்த ஒன்பது வருடத்தில் அவன் எத்தனை களங்களைக் கண்டிருப்பான். ஓயாது உடல்வருத்தி அவன் எப்படி உங்களுக்காய் உழைத்திருப்பான்.

மனம் வெம்முகிறது. வெற்றிக்குரிய எங்கள் தளபதியை ஏன் விதைக்கப்போகிறோம?!

போர்க்களத்தில் ஆரம்ப காலங்களில் இவன் 50 கலிபர் அணியின் தலைவனாக இருந்தான். பதுங்கித்தாக்குதல்களும் அதிரடித்தாக்குதல்களுமே நடந்த அன்றைய சண்டைக் காலத்தில் அச் சண்டைகளுக்கு 50 கலிபர் அணி தேவையானதாக இருக்கவில்லை. எல்லோரும் சண்டைக்காகப் புறப்படும்போது அவன் வாய்ப்பின்றி இருந்தான். ஆயினும்; எவரும் சிந்திக்காத கோணத்தில் சிந்தித்து தளபதியிடம் தனது அபிப்பிராயத்தைச் சொல்லி அனுமதி கேட்டு, தானே வேவு பார்த்து, வாய்ப்பான இலக்குகளைத்தெரிவு செய்து தன்னுடன் 50 கலிபர் அணியை மட்டுமே வைத்து அன்று எதிரிகளுக்குத் தலைவலியாய் எழுந்தான். சொல்லக்கூடிய பல சண்டைகளை அவன் வெற்றிகரமாகச் செய்தான். இதுவே, தலைவர் அவர்களால் எதிர்பார்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட 'பசீலன்' அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிக்கு இவன் அனுப்பப்பட வேண்டியவன் என்ற அவதானத்தை இவனுக்குப் பெற்றுக்கொடுத்தது.

பயிற்சி முடித்து வெளியேறியபின்னான அவனுடைய காலத்தை நினைத்துப்பார்க்கிறோம். அவை சேகரின் தோள்கள் அதிக பாரத்தைச் சுமக்கத்தொடங்கிய நாட்கள். அவன் எங்களுடன் வாழ்வதை குறைத்தான்; எங்களுக்காகவே எதிரிக்குள் வாழ்ந்து உழைக்கத்தொடங்கினான். அவனது இனத்திற்காக, அவன்நேசித்த மக்களுக்காக இந்த வீரனின் இனிய இளமைக் காலங்களெல்லாம் எதிரியின் நரகங்களுக்குள்ளேயே கரையத்தொடங்கின.

மண்டைதீவு. மூன்றாம் கட்ட ஈழப்போர் மூண்டு விட்டபோது' அந்த உப்புக்கடல் சூழ்ந்த பகைமுகாமினுள் தலைவனின் திட்டப்படி எவருக்கும் தெரியாது ஏதோ செய்து கொண்டிருந்தார்கள் சேகரும் அவன் தோழர்களும். அந்த முகாமின் இறங்கு துறையிலிருந்து பிரதான முகாம் வரையான கடினமான பகைப்பிரதேசத்தினுள் கடல்நீரிலும் நிலத்திலுமாக, சீரான உணவும் நித்திரையுமின்றி எத்தனை நாட்களாய் நரகத்துள் உழன்றது சேகரின் வாழ்வு. அந்த வாழ்வின் மூலம் ஒரு தாக்குதல் திட்டத்திற்கான பெறுமதியான தகவல்களை அவன் பெற்றுத்தந்தான்.

ஆனாலும், சிறிய தவறுகள்கூட பல போராளிகளின் உயிர்களை அந்தக் கடல் நீரினுள்ளேயே கரைத்துவிடும். அப்படி எதுவும் நடந்துவிடுவதை விரும்பாத தலைவர், தளபதிகள் வகுத்த திட்டத்திற்கு மேலாக சில மாற்றுத் திட்டங்களைப்பரிந்துரைக்க, அதற்காக ஓர்

→

உடனடி வேவைச்செய்து முடிப்பதற்கு எல்லாரின் கண்களுள்ளும் நிழலாடியவன் நம்பிக்கைக்குரிய சேகர் தான்.

அவசர அவசரமாக அந்த வேவுத் தேவைகளையெல்லாம் செய்து முடித்து, நம்பிக்கையான தகவல்களைப் பெற்றுத்தந்து, தலைவரின் திட்டப்படி 15 பேர் கொண்ட அணிகளுக்குத் தலைமையேற்று, எதிரியுள் இரகசியமாக ஊடுருவி, அந்த இறங்குதுறையைத் திடீர்த்தாக்குதல் மூலம் கையகப்படுத்திப் பிரதான முகாமிற்கான தாக்குதல் அணிகளை உள்ளெடுக்கவேண்டிய முக்கியத்துவமான பணி சேகரிடந்தான் ஒப்படைக்கப்பட்டது. அப்போது அந்த இருபது வயதேயான சேகரிடம் நம்பி பெரிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. எம் போராளிகளின் எத்தனை உயிர்களின் இருப்பு அவன் கைகளில் இருந்தன. எல்லாவற்றையும் சிந்தித்துப் பொறுப்புணர்வுடன் செயற்படக்கூடியவனென எல்லோரும் அவனில் வைத்த நம்பிக்கையை அந்தச் சண்டையில் தனது செயலின் மூலம் மெய்ப்பித்தான்.

'சூரியக்கதிர்' எதிர்ச்சமர் நடவடிக்கை. அந்தக் காலங்களில் எமமிடம் பீரங்கிகளோ, ஆட்லறிகளோ இருக்கவில்லை. வேவு அணிகளே எமது வலுமிக்க பீரங்கிகள் என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் களத்தில் சின்னஞ்சிறு வேவு அணிகளுடன் அடிக்கடி போய்வரும் சேகர், 'உறங்காத கண்மணியாய்' உலா வந்துகொண்டிருந்தான்.

இந்த நாட்களில் ஒருநாள் பெண் போராளிகளின் பகுதியினூடாகத் தன் வேலைக்காகப் போய்க்கொண்டிருந்தவனிடம் ''என்ன சேகர் நெடுகலும் குண்டோடையே திரியிறீர்'' என்று அவர்களின் தளபதி கேட்டதற்கு ''நான் ஒரு வேவுக்காரன். எனக்குக் குண்டுதான் எல்லாமே. இதை வச்சே எல்லாத்தையும் சமாளிப்பன்'' என்று சொல்லிக்கொண்டிருந்தவன், சடுதியாகத் திடீரெனப்பாய்ந்தோடி அந்த மதிலைக்கடக்க குண்டு ஒன்று வெடித்தது. எல்லோரும் திகைத்துப்போனார்கள். சில வினாடிகளில் நடந்ததைப்பார்த்துத் திகைத்தார்கள் அவர்கள். அந்த மதிலை அடுத்து சில எதிரிகள் சேகர் அடித்த குண்டில் மாண்டுபோய் மண்ணில் கிடந்தார்கள். இப்போது நினைத்துப் பார்த்தாலும் பிரமிப்பாய் இருக்கிறது.


'ஓயாத அலைகள்-01', யாழ்ப்பாண பின்வாங்கலின் பின்னான அந்தக்காலம். புலிகள் நிச்சயப்படுத்தப்பட்ட வெற்றியொன்றை ஈட்டவேண்டிய நெருக்கடி மிகுந்த காலம். அந்தச் சமருக்கான வெற்றியின் நிச்சயமென்பது எடுக்கப்படும் வேவுத்தரவுகளிலேயே பெரிதும் தங்கி நின்றது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட அந்த வேவு நடவடிக்கையில் முக்கியமான ஒரு பகுதியின் வேவுப்பணிகள் சேகரிடம் கொடுக்கப்பட்டிருந்தன. மீண்டும் சேகர் எதிரிக்குள் வாழத்தொடங்கினான். இறுதியில் எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு, சமருக்கான தாக்குதல் பணிகள் அனைவருக்குமாகத் தலைவரால் பிரித்துக்கொடுக்கப்பட்டபோது, சேகரின் தோள்களில் விழுந்தது சாதாரண சுமையல்ல. அது வெற்றிக்கான 'சாவியை'க் காவிச் செல்லும் சுமை.

இரவு பகலாய் நீந்தித்திரிந்து அறிந்த பெருங்கடலினூடே தெரிந்தெடுத்த நகர்வுப் பாதையின் மூலம் தாக்குதல் அணிகளை உள்நகர்த்தி தளத்தின் கடற்கரைக் காவலரண்களைத் தகர்த்தெறியவேண்டும். இத்திட்டம் நிறைவு செய்யப்படும்போது, கடற்கரையை அண்டியிருக்கும் எதிரியின் கட்டளைபீடம் எமது அச்சுறுத்தலால் நிலைதடுமாற அச்சமருக்கான எமது ஏனைய நடவடிக்கைகள் சுலபமாக்கப்பட்டு விடும்; வெற்றி நிச்சயப்படுத்தப்பட்டுவிடும். அதற்காக லெப். கேணல் தாசனின் கடற்புலிகள் அணியை அழைத்துச் சென்றவன் அவன்தான்.

அதுவே சிறிய தவறொன்றினால் பிசகிவிட்டால் பெருங்கடலுக்குள் செல்லும் அணிகளுக்கு மீட்சி என்பதே கிடையாது. அத்தனை உயிர்களும் கடலோடு கரைந்துபோக வேண்டியதுதான். சேகர் திரட்டிய தகவல் மீதும் சேகரது ஆற்றல் மீதும் கொண்ட நம்பிக்கையால் மட்டுமே தீட்டப்பட்ட இத்திட்டம் இறுதியில் வெற்றிகண்டது. தளம் எங்கள் கைகளில் வீழ்ந்தது.

இப்படிச் சொல்லிக்கொண்டேயிருக்கலாம். அவனது கால்படாத களங்கள் இல்லையென்றவாறு போர்க்களக் கதாநாயகனாய் அந்த எளிமையான போராளி உலா வந்தான். 'ஜயசிக்குறுய்' களம்தான் எங்கள் வீரனது உச்சளவு உழைப்பை உறிஞ்சியது. அவனை ஒரு தளபதியாகவும் உயர்த்தியது. அந்தக் களத்தில் எத்தனை சவால்களை எதிர்கொண்டபோதும் வெற்றிகொண்ட அவனது மன ஆற்றலின், தாங்கு சக்தியின் எல்லை எதுவென நாங்கள் அறிந்துகொள்ள முடியவில்லை.

எதையெல்லாம் கொடுத்தபோதும் அதையெல்லாம் சுமந்தான். தனக்கென ஓய்வு தேடி வந்த வேளைகளிலும் இந்தத் தேசத்திற்காய் இன்னும் இன்னும் பாரம் சுமந்தான். ''சிறு அணிகளை வைத்துக்கொண்டு போர்க்களத்தில் பெரும் பணிகளை



ஆற்றக்கூடிய வல்லமையை நான் அவனிடத்திலேயே கண்டேன். சில சமர்களில் அவனது இந்த ஆற்றல் தான் எமக்குப் பெரும் வெற்றிகளைத்தந்தது'' என்று பெருமையுடன் மனம் நெகிழ்ந்து பாராட்டினார் அவனை வளர்த்த தளபதி கேணல் தீபன். அதில் சிலவற்றையேனும் இதில் உங்களுக்கு நான் சொல்லவில்லையென்றால் அது எனது பொறுப்பின்மையாகி விடும்.

'வெற்றி உறுதி' யென்று எதிரி முன்னேறிக் கொண்டிருந்தான். ஆனால், அவனது பிடரியில் அடிகொடுக்கும் தலைவரின் போர் வியூகத்திற்காகத் தாண்டிக்குளம் ஊடறுப்பிற்குப் புலியணிகள் தயாராகிக்கொண்டிருந்தன. தளபதிகளும் போராளிகளும் அதற்காகச் செல்ல நேர்ந்தபோது, புளியங்குளம் பகுதியின் முன்னணி நிலைகளுக்கான தற்காலிகப் பொறுப்பாளனாகச் சேகர் நியமிக்கப்பட்டிருந்தான். ஒரு தளபதிக்குரிய பணி தலைவரால சேகருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவனது ஆளுமைக்கு அத்தனை விரைவாய் பரீட்சை வைத்தான் எதிரி. மட்டுப்படுத்தப்பட்ட அணிகளுடன் நின்ற சேகரின் மேல் எதிரியின் படைவெள்ளம் அணையுடைத்துப் பெருக்கெடுத்தது.

சமரை எதிர்கொண்டான் சேகர். தானே முன்நின்று தனது சிறிய அணிகளைக் களமிறக்கிச் சண்டையைத்தொடங்கினான். சமர் உக்கிரம் கண்டது. எவருமே எதிர்பார்த்திராத ஒரு சமரை அன்று அவன் நிகழ்த்திக்காட்டினான். மூன்று டாங்கிகள் அழிக்கப்பட்டு கொத்துக் கொத்தாய் எதிரி சாய்ந்து விழ, முன்னேறி வந்தவன் பனிக்கு நீராவியுடனேயே முடங்கிப் போனான்.

எமது முன்னணிப்படைவலு இல்லாத நிலையிலும், கட்டளைத்தளபதிகள் இல்லாத நிலையிலுந்தான் அப்படியொரு மரண அடியைத் தாங்கள் பெற்றுக் கொள்ள நேர்ந்தது என்பதை இப்போது நாங்கள் இதை எழுதும்போதும் எதிரியால ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கும். இதைச் சாதித்த சேகர் ஒரு தளபதி என்ற உயர்நிலையில் பெரும பணிகளைச் சுமக்கத் தொடங்கினான். இக்காலத்தில் நாம் இழக்கநேர்ந்த அனுபவம்மிக்க வீரத்தளபதியான லெப். கேணல் தனத்தினுடைய பொறுப்புக்கள், சுமந்த சுமைகளையெல்லாம் சேகரின் தோள்கள் சுமக்கத்தொடங்கின.

அப்போது புளியங்குளம் புலிக்குகையாக மாறியிருந்தது. அதற்குள்நுழைய எதிரி நினைத்தால் அவன் அதற்குள்ளேயே மாளவேண்டியதுதான். எப்படி முயன்றும் எதிரியால் அந்தக் குகையை அசைக்கமுடியாமற் போனது உங்களுக்குத் தெரியும்; தலைவர் போர்க்களத்தில் அறிமுகப்படுத்திய புதிய தந்திரமது. அதனை நிறைவேற்றத் தளபதி கேணல் தீபனுக்குத் துணையாக நின்றவன் தளபதி சேகர்தான். எதிரி புளியங்குளத்தை நினைக்கும்போது தனது சாவையும் நினைக்கவேண்டியதாய் மாறிவிட்ட களச்சூழலை உருவாக்கச் சேகர் சிந்திய வியர்வையும் அவன் கொண்டிருந்த ஓர்மமும் ஒவ்வொரு போராளியையும் எதிரி வீரரால் பத்துப் பேருக்குச் சமனாய் வளர்த்தெடுத்ததும இதில் எழுதிமுடிக்கப்படக் கூடியதல்ல. ஒவ்வொரு அரணிலும் சேகர் ஒருமுறை கதைத்துவிட்டுச் சென்றால் அந்த அரணே ஒரு இரும்புக்கோட்டையாக மாறி விடும். இப்படித்தான் அந்தப் புளியங்குளம் 'புரட்சிக்குள'மாகி எதிரிக்கு மரணத்தை நோக்கிய பயணமாகியது.

## லெப். கேணல் - சேகர்

(மாயாண்டி. ஜெய்க்குமார்)
சிறப்புத் தளபதி,
சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி

'ஜயசிக்குறுய்' களத்தில் வைத்துத் தலைவரால் இனங்காணப்பட்ட சேகர், தமிழீழப் போரரங்கில் புகழ்பூத்த படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டான். படையணியைப் பொறுப்பேற்றபின் அவனது போர்ச்சாதனைகளைவிடவும் மென்மையான இதயங்கொண்ட அவனது செயல்களே எங்கள் மனதில் பிரமிப்பை ஊட்டின. அவன்பால் ஆழமான அன்பை வேரூன்றப்பண்ணின. நீங்கள் அவன் பற்றி ஊகித்துக்கொள்வதற்காக ஓரிரண்டைச் சொல்கின்றேன்.

1993 பெப்ரவரி மாதம். அந்தக் கிளிநொச்சி ஊடறுப்புச் சமர் சேகரின் போரியல் ஆற்றலுக்குச் சிகரம்வைத்த சமர் அவனாலேயே அந்த வெற்றி சாதிக்கப்பட்டது என்று நான் எழுதினாலுங்கூட அந்தப் போரில் நின்றவர்கள் யாரும் மறுத்துக் கூறமாட்டார்கள். ஆனால், அந்தச் சமர்பற்றி சேகர் தனது நாட்குறிப்பில் என்ன எழுதியிருந்தான் என்பதை வீரச்சாவடைந்த பின்பு அவனது நாட்குறிப்பில் தேடினேன்.

''நான் சாதித்துவிட்டேன். எனக்குத் தந்த பணிகளையெல்லாம் என் போராளிகள் செய்து காட்டிவிட்டார்கள். எதிரிகளை ஓட ஓட இன்றைய களத்தில் நானும் எனது போராளிகளும் விரட்டினோம். ஆனால், நான் என் போராளிகள் பதின்மூன்று பேரை இழந்திருக்கின்றேன். அந்த உயிரிழப்புக்கள் என் மனதைக்குடைகிறது'' என்றிருந்தது.

ஒருநாள் கிளிநொச்சியில் கைப்பற்றிய பகுதியில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஒரு போராளியின் காலில் 'மைன்ஸ்' வெடித்துவிட்டிருந்தது. அது போர்க்களத்தில் தவிர்க்க முடியாதது என யாவரும் அறிவீர்கள். ஆனால், எங்கள் தளபதி தனது நாட்குறிப்பில் தன் மன வெம்மையை எப்படிக்கொட்டியிருந்தான் என்று பாருங்களேன்.

''நான் படையணியைப் பொறுப்பெடுத்து இவ்வளவு காலத்துள் எனது பிழையால போராளி ஒருவனின் காலை நான் பறிகொடுத்துவிட்டேன். அந்தப்பாதையை 56 நாட்களாக நாங்கள் பாவித்தும் ஒருவருக்கும் வெடிக்காத அந்த 'மைன்ஸ்' இன்டைக்கு ஏன் வெடித்தது? எப்படியோ நான் தான் அதற்குக் காரணம். என்னுடைய கவனயீனத்தால் என்னுடைய படையணியில் இழந்த முதல் இழப்பு இதுதான். நான் →

இப்படி வேறும் பிழைகள் விட்டு என்னருமைப் போராளிகளின் அனாவசிய இழப்பிற்குக் காரணமாக இருந்திருக்கிறேனா என யோசித்துப்பார்க்கிறேன். நான் அறியக்கூடியதாக இல்லை. இனி இப்படியொரு பிழையை விடமாட்டேன் என இந்நாளில் உறுதியெடுத்துள்ளேன்'' (27-03-1998)

இப்போது சொல்லுங்கள் எங்கள் சேகரை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

எதிரியால் தன்னைச் சூழவும் அவலங்கள் நிகழ்த்தப்பட்டபோது அதற்கு அவன் எப்படி பழிவாங்கத்துடித்திருந்தான் என்பதை அவனது நாட்குறிப்பிலிருந்து அறிந்துகொணடோம். கிளிநொச்சியில் தான் பிறந்த மண்ணில் எம் மக்களைக்கொன்று தாண்டவமாடிய எதிரி, பெப்ரவரி சண்டையில் வீரச்சாவடைந்த எமது பெண் போராளிகளின் உடல்களை அநாகரிகப்படுத்தி வெறியாடிய பகைவனின் படையணி, சேகர் வழிநடத்திய 1998 யூன் 04ம் திகதி களத்தில் முன்னேறி வந்த போது அதே எதிர்ப்படையணிக்கு முறையாக அடிகொடுத்துத்தொகை தொகையாகச் சாய்த்த போதுதான் மனதில் அமைதியை உணர்ந்திருந்தான்.

இப்படித்தான், மன்னாரில் 'ரணகோச -4' இலும் அம்பகாமத்தில் 'வோட்டசெட்' இலும் எம் வீரர்கள் பலரை இழந்தபோது தீயாய் கனன்ற அவன் மனம் அதே பகைவர்களை 'ரணகோச 05 இலும் 'ஓயாத அலைகள் -03' இலுமாக வெற்றி கொண்டுவிட்ட பின்னர் தான் ஆறுதல் கொண்டது.

ஆனையிறவிற்கான இறுதிச்சமர்களின்போது முகாவில் ஊடறுப்பு முயற்சியில் ஓர் அணிக்குத் தலைமையேற்றுப் போனவன், எதிரியிடம் அடிவாங்கித் தன் தோழர்களை இழந்து வந்தபோது துயரமும் ஆவேசமும் மேலிட, மீண்டும் மிகக் கடுமையாக உழைத்து இறுதியில் ஆனையிறவை வீழ்த்துவதற்கான சண்டையில் ஒரு படைத்தொகுதிக்குத் தலைமைதாங்கிச்சென்று அலலிப்பளை நீரேரி வரை படை நடத்திப் பெருமளவில் எதிரிகளை வீழ்த்தி வெற்றி கொண்டு விட்டபோதுதான் அவனது மனம் துயரத்திலிருந்து மீண்டது.

அவனது போராற்றலை நான் சொல்லும்போது தாளையடித் தளம்மீதான தாக்குதலை விட்டு விட்டுச்சொல்லமுடியாது. அப்படிச்சொன்னால் அது முழுமைபெறாது.

53 வது டிவிசனின் 'கொமாண்டோ பிரிகேட்' எதிரியின் நடவடிக்கை ஒன்றிற்காக ஆயத்தப்படுத்தப்பட்ட நிலையில் நிலைகொண்டிருந்த பலமானகோட்டை அது. முன்னர் எம்மால் வீழ்த்தப்பட்ட கிளிநொச்சித் தளத்தின் பலத்திற்குக் குறையாத வலுமிகக தளம் அது. குடாரப்புவில் இலகுவில் தரையிறங்கிய அணிகள் விடிந்தபோது தமது கடல் தொடர்பையும் இழந்துபோயின. தாளையடித் தளத்திற்கான அந்தச் சமர் தொடங்கியிருந்தது. எதிரியைத் தோற்கடித்தவாறு மூர்க்கமாக, எல்லோருக்கும் நம்பிக்கை தரும்படியாய் முன்னேறியிருந்தன புலியணிகள். ஆனால், அன்று மாலைக்குள்ளேயே நாம் கைப்பற்றிய பகுதிகளில் கணிசமானவற்றை எதிரி மீண்டும் வீழ்த்திவிட்டான். இத்தாவிலில் தரையிறங்கி 30,000 எதிரிகள் நடுவே நிலைகொண்டிருந்த அணிகள் தாளையடி விநியோகப்பாதைக்காகக் காத்திருந்தன.

மறுநாள் விடிவதற்குள் மாற்று ஏற்பாடுகள் செய்தேயாகவேண்டும். சேகரைக்களமிறக்குவதாக ஏற்பாடாகியிருந்தது. அணித் தலைவர்களையெல்லாம் ஒன்று கூட்டித் தளபதி தீபன் கதைத்தார். 'இது எங்கட ஆயிரம் போராளிகளின் உயிர்ப் பிரச்சனை. நாங்கள் எல்லாம் உயிரோட இருந்து கொண்டு ஆனையிறவையும் வீழ்த்தாமல் அவர்களின் அழிவிற்குக் காரணம் சொல்லேலாது. நாங்கள் வென்றுதான் ஆகவேண்டும். இல்லையென்றால் நாங்கள் இதில முயற்சித்து அழிந்தால் எங்கட பக்கம் நியாயம் இருக்கும்.''

சேகர் போராளிகளையும், தனது பணியையும் எண்ணியவன், எழுச்சிகொண்டவனாக இரவிரவாய் தவண்டு புரண்டு தானே வேவு பார்த்தான்.

மறுநாள் போரின் ஒரு முனையை வழி நடத்திக் களம் குதித்தான். அந்தத் தளத்தை அடுத்து வந்த நாற்பது மணித்தியாலத்திற்குள் வெற்றிகொள்ளப்பண்ணினான் எங்கள் தளபதி சேகர். அப்போது தலைவரின் ஆனையிறவிற்கான வியூகம் முழுமை கண்டது.

இதையெல்லாம் நான் பெருமையுடன் எழுதும்போது ஒரு விடயத்தைக் குறிப்பிட மறமின்றிச் சென்றுவிட்டேன். அது மனதுக்குள் நெருடலாக இருக்கின்றது. அதைச் சொல்லியே விடுகிறேன்.

''உங்கள் பிள்ளைகளை, உறவுகளையெல்லாம் போராட விட்டு விட்டு, இந்த ஊர் உலகத்தில் உள்ள கோவில் குளமெல்லாம் ஏறித்திரிந்து, நேர்த்தி வைத்து, பசிகிடந்து, தவமிருந்து எங்காவது சண்டை மூண்டால் நித்திரை விழித்து எப்படி யெல்லாம் நீங்கள் பதைபதைப்பீர்களோ அத்தனை அக்கறை எங்கள் மீது எங்கள் தளபதிக்கு இருந்தது.''

1998ல் 'ஓயாத அலைகள்-02' இன் வெற்றிச் சாதனையில் சேகரின் பங்கை அறிந்த அனைவரிடமும் பாராட்டுப்பெற்று மகிழ்ச்சியில் திளைத்திருந்தவன், அடுத்து வந்த சில மாதங்களில் படையணிச் சிறப்புத் தளபதி என்ற பொறுப்பிலிருந்து தலைவரால் எடுக்கப்பட்டான். எதிரித்தளத்தில் எடுக்கப்பட்ட பொருட்களைத் தனது படையணித் தேவைக்காக அனுமதி பெறாமல் வைத்திருந்தமைக்கான தண்டனை பெற்ற சிறப்புத் தளபதி சேகர், ஓர் அணியின் தலைவனாக நியமனம் பெற்றுச் சிராட்டிக்குளம் காவலரண் பகுதிக்குச் செல்ல நேர்ந்தது. அந்த மெல்லிதயம் படைத்த சேகர் தான்விட்ட தவறுக்காகத் தலைவரால் தண்டிக்கப்பட்டபோது அடைந்த துக்கம் இருக்கிறதே அதை அவனுக்கு அருகில் இருந்தவர்களால்தான் உணர்ந்துகொள்ள முடிகிறது. ஆனால், ஓர் அருமை போராளியல்லவா அவன். மீண்டும் படிநிலை வளர்ச்சியடைந்து தலைவர் அவர்களின் நம்பிக்கைபெற்று, கேணல் தீபனுக்குத் துணையான தளபதியாக உருவெடுத்து, 2000ம் ஆண்டு 6ம் மாதம் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதியாக மீண்டும் தலைவரால் நியமிக்கப்பட்டான்.

“அவன் முன்னணியில் எங்களோடு களத்தில் நின்றால் எந்த ரண களத்திலும் அச்சம் என் பதை நாங்கள் அறிந்ததிலை. வெற்றி யைத் தவிர எங்கள் கண்கள் அங்கு வேறெ தையும் காண்பதில்லை. சேகர் என்ற உரு வமே களத்தில் எங்களுக்குத் துணிவுதான். எங்களை காத்து நாங்கள் சாதிக்கவென்றே அவன் சாவுக்குள் எப்போதும் எங்களுடன் நின்றான்.”

அவன் தலைமையேற்ற அடுத்த நடவடிக்கை 'ஓயாத அலைகள்-04' மட்டுப்படுத்தப்பட்ட இதன் முதல்நாள் சண்டை ஓரளவு வெற்றிகரமாக முடிந்திருந்தது. ஆனால, ஒரு பணிக்காகச்சென்ற எமது அணியொன்று எதிரியின் சுற்றிவளைப்பிற்குள் அகப்பட்டிருந்தது. மீடக எடுதத முயற்சிகள் தோற்றுப்போயின. சேகர் உழலத் தொடங்கினான்; சாப்பாடின்றி, நித்திரையின்றி மீண்டும மீண்டும் முயற்சித்துத் தோற்றும் விடாது. விடாது முயற்சித்துத் தன் வீரர்களை அதிகாலை மீட்டெடுத்தபோது அவன் அடைந்தமகிழ்ச்சியை நான் இதில் எழுதி உங்களுககு உணாத்திவிடமுடியாது. தன் போராளிகள் மீது அவன் கொணட அன்பு சாதாரணமானதல்ல. அதனால்தான் அவனது பிரிவை மரணகளத்துள் வாழும் எங்களாலும் சகித்திருக்க முடியாதிருக்கிறது. உங்களது பிள்ளைகளை, உறவுகளையெல்லாம் போராட விட்டு விட்டு, இந்த ஊர் உலகத்தில் உள்ள கோவில் குளமெல்லாம் ஏறித்திரிந்து, நேத்தி வைத்து, பசிகிடந்து, தவமிருந்து எங்காவது சணடை மூண்டால், நித்திரை விழித்து எப்படியெல்லாம் நீங்கள் பதைபதைப்பீர்களோ அத்தனை அக்கறை எங்கள் மீது எங்கள் தளபதிக்கும் இருந்தது.

''சேகரப்பா'' என்று போராளிகள் தமக்குள் கதைக்கும் 25 வயதேயான 'குழந்தைத்' தளபதியிடமிருந்த மென் உணர்வுகளை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா?! அவன் தன் நாட்குறிப்பில் எழுதி வைத்துக் காத்திருந்தான்; பாருங்கள்.

''தமிழீழம் கிடைத்தாப் பிறகு என்னோட நிண்டு சண்டை பிடிச்ச எல்லா பெடியள் வீட்டையும் போகவேணும். அவங்களின்ர அம்மா, அப்பா, சகோதரங்கள் எல்லாரோடையும் அவையின்ர கவலைதீரக்கதைக்கவேணும் என்பதே என் ஆசை. இனித்தெய்வத்தின் சிந்தனைப்படியே எல்லாம் நடக்கும். அது நடக்கும் என்றே நம்புகின்றேன்.'' (10-06-1998)

இதை எழுதிக் காத்திருந்த எங்கள் தளபதி சேகர் எங்கே?

'ஓயாத அலைகள் -04', மீண்டுமொரு பாய்ச்சலுக்கான ஆயத்தம். எதை இழந்தும் இதைப் பிடித்தே தீருவேன் எனத்தலைவரிடம் சொல்லிவிட்டு வந்ததை தனது அருகிலிருந்த போராளிகளிடம் சொல்லியிருந்தான் சேகர். ஒழுங்குபடுத்தல் எல்லாம் முடிந்திருந்தது. காலை விடிந்து விட்டால் சமர் வெடித்துவிடப் போகிறது. தளபதி தீபனிடம் வந்தவன், ''அண்ணை எல்லாம் சரி. எதுக்கும் ஒருக்கால் இண்டைக்கும் இரவுக்குப்போய் பாதையெல்லாத்தையும் வடிவாய்ப்பார்த்து விட்டு வந்தால்தானண்ணை நிம்மதியாய் இருக்கும்'' எனகேட்டு அனுமதிபெற்று வந்தான்.

வேவுக்காக வெளிக்கிட்டுப் போனவனைச்சற்று நேரத்திலேயே வெடிவழுந்து உடல் சல்லடையாகக் காயத்தோடு தூக்கி வந்தார்கள். அவனை எப்படியாவது காத்துவிடும் துடிப்போடு மருத்துவமனைக்கு அனுப்பிக்காத்திருந்தோம். நான்கு நாட்களாக அவன் உயிரோடு போராடியபோது நாங்கள் - அவன் வளர்த்த போராளிகள் - கைதட்டி அவனைக்காப்பாற்ற முடியாது கையாலாகாது நின்று தவித்தோம். அவனது சாவுச்செய்தியை எங்களால் ஜீரணிக்க முடியாதே! எண்ணிப்பார்க்கிறோம்.... அவனது இழப்பை என்றும் விரும்பியிருக்காத நாங்கள் அவனைக்களத்தில் காக்க எண்ணி பின்னணியில் வைத்திருக்க எப்போதுமே எண்ணியதில்லையே! அவன முன்னணியில எங்களோடு களத்தில் நின்றால எந்த ரணகளத்திலும் அச்சம் என்பதை நாங்கள் அறிந்ததில்லை. வெற்றியைத் தவிர எங்கள் கணகள் அங்கு வேறெதையும் காணபதிலலை சேகர் என்ற உருவமே களத்தில் எங்களுக்குத் துணிவதான். எங்களைக் காத்து நாங்கள் சாதிககவென்றே அவன் சாவுககுள் எபபோதும் எங்களுடன் நின்றான்.

இப்போது .....
எங்கள்வீரத் தளபதி வீரமரணம்.

நிச்சயமாக வீரமரணம்.

எங்கள் மக்களே! போராளிகளின் பெற்றோர்களே! சகோதரர்களே!

தமிழீழம் கிடைத்த பின்னர் உங்கள் பிள்ளைகளின் வீரம்பற்றிச் சொல்ல, உங்கள் கவலைதீரக் கதைக்க காத்திருந்தாங்களின் தளபதி சேகர் உங்கள் வீடுகளுக்கு இனிவரமாட்டான்.

இனி நீங்கள்தான் கிளிநொச்சித்துயிலும் இல்லத்தில் அவன் கல்லறைக்குச்செல்ல வேணடுமே.

அவன் கல்லறையின் மேற்பரப்பில் உங்கள் காதுகளை வைத்துக்கேளுங்கள்.

அவன் தன் கல்லறையின் ஆழ்ந்த மௌனத்தினூடே உங்கள் காதுகளில் ஏதாவது சொல்லக்கூடும்.

அதில் நீங்கள் ஆறுதல் அடையவுங்கூடும்.

☆☆

அ பார்த்திபன்

# கல்லறைக் கதவுகள் திறக்கும் காணிக்கைத் திருநாள்

சாமம் பேயுலவும் சவக்காலை
என்ற பழிச்சொல்
போய் மறையலானது.
வீரர் துயிலுகின்ற இல்லம்
என்ற புனிதச் சொல்
வாய் நிறையலானது.
கார்த்திகை மாதத்திலேன் கனத்தமழை?
ஏனிந்தப் பச்சைவிரிப்பு?
நிலமேன் நெக்குருகிக் கிடக்கிறது?
காற்றேன் ஓவென்றிரைகிறது?
சூரியனேன் சுட்டெரிப்பதில்லை?
ஆயர்ந்துறங்கும் ஆலகண்டருக்கு
இயற்கையின் இந்தமாத அஞ்சலியிது.

ஓவென்றிரையும் ஊதற்காற்றே!
வேகம் குறைத்து வீசு.
தேவகுமாரர்கள் இங்கே தூங்குகின்றனர்.
துயில் கலைத்துத் தொலைக்காதே.
கல்லெறியும் பொல்லாக் கனத்த மழையே!
மெல்லப் பூவெறிதல் போலப்பொழிக.
இங்கே ராஜகுமாரிகள் உறங்குகின்றனர்
தொட்டெழுப்பித் தொலைக்காதே.
நிலமே! மழைநீரைக் குடிக்காதே
உள்ளே சில்லிட்டுப் போகும் அவர்தேகம்.
அதிர நடப்பவரே கவனம்
பிள்ளைகளின் ஆனந்தசயனம் கலையக் கூடும்.
பூக்களெனினும் மெதுவாகப் போடுங்கள்
தூக்கம் கலைந்து போகலாம்.
காலப்பணியில் கண்துஞ்சாதிருந்தவர்கள்
கால்நீட்டிக் கொஞ்சம் களைப்பாறுகின்றனர்.
வாழ்வின் வசந்தம் யாவையும்
தாயக வேள்வியில் தர்ப்பணம் செய்தவர்
நீள்துயிலிற் கிடக்கின்றார்
ஏன் எழுப்ப வேண்டும் அவர்களை?



கார்த்திகை இருபத்தேழு
எம் காவற்தெய்வங்களுக்கான காணிக்கைப் பெருநாள்.
துயிலுமில்லத்தின் திருமணிக்கபாடங்கள்
அன்று அகலத்திறந்திருக்கும்.
ஊர்கூடி விதைத்த வயல்தேடி வந்திருக்கும்.
சிறகெடுத்த பறவைகளின் உறவங்கு திரண்டிருக்கும்.
தனித்த குரலில் ஒரு தாய்ப்பறவை கதறியழும்.
''மகனே!
பால்தந்த பாவி பூக்கொண்டு வந்துள்ளேன்
கால்கொண்டுதைத்து நிலம் கிழித்து
வாமகனே வெளியே.
என் கையணைப்பில் உன்னை நொடிப்பொழுதாயினும்
ஆரத்தழுவ அனுமதிப்பாய் என்மகனே.''
உயிர் பிழிந்து கசியும் உதிரம்.
திக்குற்றுப்போகும் திரண்டிருக்கும் உறவுகள்.
பக்கத்துக் குழியருகும் பாடும் துயர்ப்பாட்டொன்று
விக்கலுடன் எழும்.
அங்குமொரு தாய்ப்பறவை அழும்.
''அம்மாவென அழைத்த அமுதவாய் திறந்தின்று
இன்னோர் முறையென்னை எழுந்தழைக்க மாட்டாயோ?
கனவிற் தினம் வந்து கட்டியெனை அணைக்கின்ற
மகளே! ஒரு தடவை மார்பணைக்க வாராயோ?''
சொலலியழும் குரலில் கல்லும் கசிந்துருகும்.
கேட்கும் செவியெல்லாம் கிறுகிறுத்துப் போகும்.
உள்ளே நரம்பெல்லாம் தீமூண்டு நடுங்கும்.
ஆறாத் துயர்வெள்ளம் அணையுடைத்துப் பாயும்.

அப்போதுதான் கல்லறையின் கதவுகள் திறப்பதாய்
ஒரு காட்சி விரியும்.
உள்ளே முகம் தெரியும்.
விழிகள் திறந்து பேசத்துடிப்பதாய் வாயசையும்.
மெல்லச் சிரிப்பொலியும் கேட்கும்.

''அம்மா!
என்னை இழந்ததாய் ஏன் புலம்புகிறாய்.
எனக்கா சாவு வரும்?
உள்ளே உயிர்கொண்டே உறங்குகின்றேன்.
தமிழீழம் வரும்வரை எனக்குச் சாவில்லை
அதன் பின்பும் எனக்கு அழிவில்லை.
இது பீஷ்மரின் படுக்கை
காத்திருக்கும் கண்ணுறக்கம்.''
என்றோர் அசரீரி எல்லாச்செவிகளிலும் கேட்கும்.
கோயில் மணிகள் அசையக் குழிவழிகள் முடிவுறும்.
கல்லறைக் கதவுகளில் பூட்டு விழும்.
காணிக்கைத் திருநாளுக்கான பூசைமணியசைய
சுற்றுப் பிரகாரம் சூடு பெறும்.
நெய்விளக்குகள் நிமிர்ந்து சுடர்விட்டெரியும்.
திருப்பலிப்பாடல் தொடங்கும்.

''மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி''

## உலைக்களம்

— வியாசன் —

பாடல் தொடங்கவே நெஞ்சு பாரம் சுமக்கும்.
விழிநீர் சொரியச் சொரியப் பாடும் போது
நெஞ்சுள்ளே கிளறும் உணர்வில் நெருப்பு மூளும்.
கல்லறையில் விழும் கண்ணீர்த்துளிகளால்
வெள்ளையடித்த சுண்ணாம்பு கரைந்தொழுகும்.

இது வீர வழிபாடு.
பழைய மரபொன்றின் புதிய வடிவம்.
வீரர்களைத் தெய்வங்களாக்கும் விதிமுறை.
ஈமத்தாழி,
நடுகல்,
வெறியாட்டு
இதுவே முதுதமிழர் காலத்து வழித்தடம்.
தீயிடும் ஆரிய மரபழித்து
மீண்டும் வேரிலிருந்து பூக்கிறது வீரபூ.

மாவீரர் நாள்
செத்த பிணங்களுக்கு சாப்பிணங்கள் கதறுவதாய்
சித்தர்கள் பழித்துரைத்த திருநாளல்ல.
வல்லமையை எமக்கு வழங்குங்கள் என்று
கல்லறைக்கு முன்னே கைகூப்பும் நாளாகும்.
உங்கள் பணிமுடிக்க உள்ளோம் நாம்
எனச்சொல்லி
பொங்கும் மனத்திடத்தைப் பெறுகின்ற நாளாகும்.
மாறாமனத்தை அருள்வீர்
நீர்பெற்ற
மானத்துக்கான மரணத்தை எமக்களிப்பீர்.
என்றோர் வரம்கேட்க எழுகின்ற நாளாகும்.

இது அருச்சுனன் தபசு.
காண்டீப நாதத்துக்கான கடுந்தவம்.
கார்த்திகை மாதம் கூத்திடும் காலம்
ஊழிக் கூத்துக்கான ஒத்திகை.
உமக்கருகில் எமக்குமொரு குழி என
போருக்குப் போகின்ற புனிதநாள்.
ஆடியே கொற்றவைக் கிழவி!
ஆயிரம் யானைகளின் பலமளிப்பாய்.
எதிர்வரும் பகைரதங்கள் யாவும்
எம் மூச்சுப்பட்டழியும் வரமளிப்பாய்.
துயிலுமில்லக் கதவுகளே! திறந்தேயிருப்பீர்.
வெற்றிபெற்றுவந்து கல்லறைக்கு மாலையிடுவோம்.
இல்லையேல்
வித்துடலாய் வந்து உனக்குள்ளே காலைவிடுவோம்.

நீண்ட அடக்குமுறைக்குள் அகப்பட்டு திணறடிக்கப்பட்ட தமிழர்களின் தேசிய வாழ்வு மீதான ஆவல் வலுப்பெற்று அதற்கான தேடல்கள் தீவிரமடையத் தொடங்கியதும், சிங்கள இனவாதம் தமிழர்களுடைய நியாயமான போராட்டத்தை இராணுவ பலங்கொண்டு அடக்க ஆரம்பித்தது. அன்றைய யதார்த்தத்தின் நிர்ப்பந்தங்கருதி இயல்பாக முகிழ்த்த ஆயுதப்போராட்டமானது தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டமாக மாறியபின், சிங்கள அராஜகம் எம்மக்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட கொடூரங்களினாலும், இடம்பெயர்வு அவலங்களினாலும் சிங்கள தேசத்தால் எம்மீது திணிக்கப்பட்ட போர் எமது சமூகத்தின் மீது நிர்ப்பந்தித்த சமுதாய ஒழுங்கு குலைவுகளினாலும் நிர்க்கதியாகி, உறவுகளை இழந்து ஆதரவற்றுக் கைவிடப்பட்ட குழந்தைகளின் எதிர்காலம் சூனியமாக இச்சமூகத்தில் எழுந்துநின்றது.

கொண்டும் இருந்தனர். ஆடை வடிவமைப்புத் தொடர்பான தொழிற்கல்வியை பூர்த்திசெய்துவிட்டு அந்த இல்லத்தின் தையலகத்தில் தொழில்புரியும் ஒரு தங்கை வழிகாட்டியவாறு என்னுடன் கூட வந்தாள்.

''தங்கச்சி, நீங்க எந்த இடம்'' நான் அவளைப் பார்த்துக் கேட்டேன்.

''திருகோணமலையில், 9ம் கொலணி'' புன்னகைத்தவாறு அவள் பதில் கூறினாள்.

''பிறகு, எப்படி இஞ்ச வந்தனியள்'' எனது கேள்வி அவளை சங்கடத்தில் ஆழ்த்திவிட்டது என்பதை உணர்ந்துகொண்டேன்.

அவள் தனது ஞாபகத்திலிருந்து நீங்கமறுக்கும் தன் குழந்தைப்பருவ கொதிக்கும் நினைவுகளை சொல்லத்தொடங்கினாள்.

''தலைவர் மாமா எங்களப் பாராட்டி எல்லாருக்கும் ஒரு 'பாட்டிபுறொக்' அனுப்பிவிட்டவர்'' அவர்களில் ஒருத்தி சந்தோசத்துடன் கூவினாள்.

''பாட்டிபுறொக்கோ?'' நான் விளங்காமல் கேட்டேன்.

''ஓம் மாமா, வடிவான சட்டை'' - சொல்லிவிட்டு எனக்கு அதைக் காட்டுவதற்காக எடுத்துவர, தனது அறையை நோக்கி ஓடினாள்.

இன்னும் அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தபோது அந்த சிறுமிகளின் அம்மாவான- பராமரிப்பாளராக இருப்பவரும் என்னுடன் கதைக்கத் தொடங்கினார்.

''தம்பி, இவளவை இப்ப ஏதோ தாங்கதான் எங்களுக்கு உடுப்புவாங்கித் தாறதாக சொல்லிக்கொண்டு திரியிறாளவை'' என்னைச் சுற்றி சூழ்ந்திருக்கும் பிள்ளைகளை பொய்யாக குற்றம் சாட்டும் தோறணையில், தனது பிள்ளைகள், தன்மீது வைத்திருக்கும் பாசத்தை பெருமிதத்தோடு என்னிடம் முறையிட்டார்.

''ஐயோ! அம்மா, கொஞ்சம் சும்மா இருங்கோவன். மாமா! அம்மாவுக்கு விசர். சும்மா சொல்லுறா. நான் சொல்லுறன் என்ன நடந்ததெண்டு''

- அவர்களில் ஒருத்தி தன் தாயின் குரலை மீறிக்கத்தியவாறு என்னருகில் வந்து சொல்லத்தொடங்கினாள்.

''அதென்னண்டால் மாமா, தாங்க ஸ்கொலசிப்பில பாஸ் பண்ணினதுக்காக, பெரியம்மா எங்கட அம்மாவுக்கு ஒரு புதுச் சாறி வாங்கிக்கொடுத்தவ''

# வெந்து துளிர்த்த மலர்கள்

இக் குழந்தைகளின் எதிர்காலத்தை வளப்படுத்தி நாளைய சமூகத்தில் அவர்களை கௌரவமான தன்னம்பிக்கை நிரம்பிய சமூக பிரக்ஞையுள்ள பிரஜைகளாக வளர்த்துவிடும் நோக்கில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களினால் 'செஞ்சோலை' இல்லம் உருவாக்கப்பட்டது.

கடந்த பத்தாண்டுகளாக போரினால் சிதைவுற்ற எம்தேசத்தில், தொடரும் அவலங்களின் மத்தியில் நூற்றுக்கணக்கான குழந்தைகளின் - குறிப்பாக சிறுமிகளின் வாழ்வின் வசந்தச்சோலையாக செஞ்சோலை இருந்துவருகிறது. ஆனால், இதுபற்றி வெளியில் அதிகம் பேசப்பட்டிருக்கவில்லை. செஞ்சோலை தன் பத்தாண்டுப் பணிவாழ்வை நிறைவுசெய்துள்ள நிலையில் அதுபற்றிய இன்றைய நிலையை பதிவுசெய்வதற்காக அங்கே சென்றிருந்தேன்.

அமைதியான காட்டுப்புறத்தே அமைந்திருந்த அந்த இல்லத்தின் மாலைச்சூழலை கலகலப்பாக்கிக் கொண்டிருந்தனர், சற்றுத் தொலைவில் ஏதோ கூச்சலிட்டவாறு விளையாடிக்கொண்டிருந்த சிறுமிகள் சிலர்.

நான் அந்தக்குடும்பத்தின் தலைவியாக, அங்கே உள்ளவர்களினால் 'பெரியம்மா' என அன்பாக அழைக்கப்படும், அந்த இல்லத்தின் நிர்வாகியான செல்வி சுடர்மகள் (ஜனனி) அவர்களைச் சந்தித்தேன். பரஸ்பர 'சம்பிரதாயமான' உரையாடல்களைமுடித்து, விடயம் தொடர்பாக கதைக்கத் தொடங்கினோம். செஞ்சோலை இல்லம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என அவர் எனக்கு விபரிக்கத் தொடங்கினார்.

''செஞ்சோலையின்ர உருவாக்கம் தேசியத்தலைவரின்ர எண்ணத்திலிருந்தே உதித்தது. தலைவரின்ர இந்த உருவாக்கத்திற்கு ஒரு கரும்புலி வீரன்ர இறுதி நேர வேண்டுகோளே காரணமாயிருந்தது.'' ''அப்ப, தலைவர் எனக்குச்சொன்ன அந்தக்கரும்புலி வீரன்ர கதை இப்பவும் எனக்கு நல்ல நினைவா இருக்கு.''

யோசனையில் ஆழ்ந்தவாறு அவர் எனக்கு அந்தக் கதையை சொல்லத்தொடங்கினார்.

''கரும்புலி மேஜர் காந்தரூபன் தன்ர இறுதித்தாக்குதலுக்கு போகமுன்னம் தலைவரிட்ட ஒரு வேண்டுகோளை விடுத்தானாம்.'' ''தாய் தந்தையரை இழந்து, தனிச்சிருக்கும் குழந்தையளின்ர வாழ்வை வளப்படுத்தி சமூகத்தில அவையளை கௌரவமான, சுயமான மனிதர்களாய் உருவாக்கிவிட தலைவரிட்ட கேட்டிருந்தானாம்.''

''அந்தக்கரும்புலி வீரனின்ர உணர்வுகளை புரிஞ்சு கொண்ட தலைவர், அதற்கான ஒரு இல்லத்தை அமைக்கச்சொல்லி என்னட்ட சொல்லியிருந்தார்.''

''முதலில் பெண்குழந்தைகளிற்கான ஒரு இல்லத்தை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தினார்.''

செல்வி ஜனனி என்னுடன் கதைத்தவாறே, 'பெரியம்மா' என அழைத்தவாறு இடையிடையே வரும் பிள்ளைகளின் கேள்விகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

அவர் அனுப்பி வைத்த ஒரு பிள்ளையோடு பத்து வயது நிரம்பிய சிறுமிகள் இருக்கும் வீடுகளை நோக்கி நான் நடக்கத் தொடங்கினேன். உள்ளே வளைந்துசென்ற வீதியால் நடந்தபோது, சிறுமிகள் இருக்கும் வீடுகள் தென்பட்டன. தமது தாயுடன் - பராமரிப்பாளருடன் அவர்கள் நான்கு ஐந்து பேராக தனித்தனியே அமைந்திருந்த வீடுகளில், சிலர் படித்துக்கொண்டும் இன்னும் சிலர் விளையாடிக்

''அது 1987 இல நடந்ததாய் சொல்வாங்க நாங்க அப்ப சின்னப் பிள்ளையள். எனக்கு ஐஞ்சு வயது இருக்குமெண்டு நினைக்கிறன்''

''ஒருநாள், கையில் கத்தி, கோடாலியோட ஊருக்கை ஊர்காவல்படை புகுந்திச்சு'' ''நாங்க ஒரு வீட்டில விளையாடிக்கொண்டிருந்தம். ஊரெல்லாம் திடீரென ஒரே கூச்சல். மரண ஓலம், சனமெல்லாம் திசை தெரியாமல் ஓடிச்சு.''

''அண்டைக்கு மட்டும் காடையர் எங்கட ஊரில நாப்பதுக்கும் மேல சனங்கள வெட்டிக் கொண்டாங்க, எண்டு சொல்வதை பிறகு கேள்விப்பட்டனான்.

''அதில, எங்கட அம்மாவையும், அவகிணத்தடியில நிண்டு ஓடேக்க கலைச்சுக்கொண்டுபோய், வெட்டிப் போட்டாங்க.''

''அதுக்குப் பிறகு ஊரில ஒரு தமிழ்ச்சனமும் இருக்கேல்ல. பிறகு ஒருவருசத்தில எங்கட அப்பாவையும் சுட்டுப்போட்டாங்க''

— பதினான்கு ஆண்டுகளின் முன் தான் அனுபவித்த கொடூரத்தின் நினைவுகளை சொல்லும்போது அந்த தங்கையின் கண்கள கலங்கின.

''பிறகு, 1991 இல நான் பெரியம்மாட்டவந்தனான்'' - சொல்லிவிட்டு அவள் நடக்கத்தொடங்கினாள். வேதனைகள் நிரம்பிய அவளது சிறுபராய வாழ்வின் கனதி என் நெஞ்சை உலுப்பியது. என்னை நானே நொந்துகொண்டேன். இனி அவர்களுடைய கடந்தகாலத்தை நினைவுபடுத்துமாறு கதைக்கக்கூடாதென எண்ணியபடியே அவளுடன் சேர்ந்து அடுத்திருந்த வீட்டைநோக்கி நடக்கத்தொடங்கினேன்.

ஒரு வீட்டின் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமிகள் சிலர் மகிழ்வுடன் என்னைச் சூழ்ந்துகொண்டு தமது வீட்டிற்குவந்துவிட்டுப் போகுமாறு அழைத்துச் சென்றனர். உள்ளே சென்று அவர்களின் மத்தியில் அமர்ந்தவாறு, ஆளுக்கொன்றாய் அவர்கள சொல்லும் கதைகளை கேட்கத்தொடங்கினேன்.

''நாங்கள் இப்ப ஆண்டு ஐஞ்சு படிக்கிறம்''

''எந்தப் பள்ளிக்கூடத்தில படிக்கிறியள்?''

— மிக இயல்பாக அவர்கள் என்னுடன் கதைத்தபோது அவர்களிடம் இருந்த குதூகலம் என்னிலும் தொற்றிக்கொண்டது.

**— அன்புமாறன் —**

''புதுக்குடியிருப்பில நாங்கள் எட்டுப்பேர் புலமைப்பரிசில் பரீட்சை எடுத்தனாங்கள். அதில நான்குபேர் பாஸ் பண்ணினாங்கள''

''இவையளும் நல்ல கெட்டிக்காரியள்தான் ஆட்களுக்கு பாஸ்பண்ண இரண்டு மூன்று மார்க்ஸ்தான் காணா''

— என்னருகில் சிரித்தவாறே நின்றிருந்த இருவரைக் காட்டி என்னைக் கூட்டிச் சென்ற தங்கை சொன்னாள்.



தங்கள் மாமாவுடன் சோலையில் குழந்தைகள்

-தன்னைப் பார்த்து புன்னகைக்கும் தாயை கண்களினால் சுட்டிக்காட்டியவாறு என்னைப் பார்த்து தொடர்ந்தும் சொன்னாள்.

''அப்படியெண்டா, நாங்கதானே மாமா அம்மாவுக்கு புதுச்சாறி கிடைக்கக்காரணம். அதான் மாமா அப்படி சொல்றனாங்கள''

- இதைச் சொல்லிவிட்டு வெட்கத்தில் தன் முகத்தை மூடிக்கொண்டு அவள் சிரித்தாள்.

''இப்ப என்னவாம் எண்டா, எங்கட தங்கச்சியவையும தங்கட அம்மாவுக்கு சொல்லியிருக்கினமாம், 'கவலைப்படாதேங்கோ நாங்களும் படிச்சு பாஸ்பண்ணி அடுத்த வருசம் உங்களுக்கும் ஒரு புதுச்சாறி வாங்கித் தாறம்' எண்டு''

- என அருகிலிருந்த வீட்டைக்காட்டி வேறொருத்து குதூகலித்தாள்.

''கெட்டிக்காரராய் படிக்கோணும். மாமா போட்டுவாறன்'' எனக்கூறி கையசைத்தவாறு அவர்களைவிட்டுப் பிரிந்தபோது அக்கா, தங்கை, அம்மா, மாமா, பெரியம்மா என அவர்களைப் பிணைத்திருந்த பாச உணர்வுகளை

12 ம் பக்கம் பார்க்க

# புயலில் எழுந்து நிற்க அவன் கற்றுக் கொள்ளட்டும்

தன் பலவீனங்களை
அறிந்து கொள்ளும் அளவிற்கு
பலமுள்ள ஒருவனை,
தனது அச்சத்தை
தானே விரட்டியடிக்கும்
அஞ்சாமையுள்ள ஒருவனை,
வெற்றியின் போது
பணிவும் பண்பும் பெறும் ஒருவனை
இறைவா எனக்கு
மகனாகத் தந்தருள்

செயல்களின் இடத்தை
விருப்புக்களால் நிரப்பாத
உன்னை அறிந்து அதன் மூலம்
தன்னை அறிதலே அறிவின் அடிப்படை
என உணர்ந்த ஒருவனை
இறைவா எனக்கு
மகனாகத் தந்தருள்

மென்மையும் சொகுசுமான
பாதைகளில்
அவனை நீ வழிநடத்தாமல்
சவால்களும்
நெருக்கடிகளும்
அழுத்தங்களும் நிறைந்த
வழியினூடாகவே
அவனை வழிநடத்து
புயலில் எழ அவன் கற்றுக்கொள்ளட்டும்
வீழ்ந்தவர் மீது கருணையுற
அவன் கற்றுக்கொள்ளட்டும்
தெளிந்த மனமும் உயர்ந்த இலக்கும்
மற்றவரை ஆளுமுன்
தன்னைத்தான் ஆளும் திறனும்
எதிர்காலத்தை அடையும் வேளை
இறந்த காலத்தை மறக்காத தன்மையும்
நிறையப் பெற்ற ஒருவனை
இறைவா எனக்குத் தந்தருள்

ஈற்றில் அவையாவும் அவனுடையவை.
அவன் எப்போதும்
கருமமே கண்ணாய் இருக்கும் அதேவேளை
தன்னை ஒரு பொருட்டெனக் கொள்ளாது
போதிய கௌரவிக்கும் உணர்வினை
அவனுக்குக் கொடு என
இறைவா நான் இறைஞ்சுகிறேன்.

அவனுக்குப் பணிவைக்கொடு
உண்மையான பேராற்றலில்



எளிமையைக் கொடு
உண்மை ஞானத்தின் திறந்த மனத்தையும்
உண்மைத் தைரியத்தின் அடக்கத்தையும்
அவனுக்குக் கொடு

அவ்வாறாயின்
அவனது தந்தையாகிய நான்
தணிவுடன் மெல்ல உரைப்பேன்
''நான் வீணில் வாழவில்லை!''

---

தமிழ் மொழிபெயர்ப்பாக பிரசுரமாகியுள்ள ஜெனரல் டக்ளசு மக்ஆதர் இனால் எழுதப்பட்ட இக்கவிதை கேணல் சங்கர் அவர்களினால் அதிகம் விரும்பிப்படிக்கப்பட்டது.

---

*(11 பக்கத் தொடர்ச்சி)*

வெந்து துளிர்த்த ....

எண்ணிப் பெருமையுற்றேன். அதேவேளை அந்த இல்லத்தின் நிர்வாகி என்னுடன் கதைக்கும் போது சொன்னவையும் என்நினைவில் வந்து போயின.

''1991 தொடக்கம் இண்டைக்குவரைக்கும் மொத்தமாய் ஆறுக்குமேல இடம்பெயர்வுகள் தம்பி ஒவ்வொரு முறை இடம்பெயரேக்கையும் போற இடத்தில படிக்க வசதியிருக்காது. இருக்க வசதியிருக்காது, முன்னூறு பேரோட எவ்வளவு கஸ்டப்பட்டிருப்பன், எல்லாஞ் சரிப் படுத்தி படிக்கத்தொடங்க நீண்டதொருகாலம் ஓடியிருக்கும்.

''பிள்ளையள் படிச்ச எல்லாத்தையும் மறந்திடுவாங்கள்

''திரும்பி திரும்பிப் படிப்பிச்சு, மரநிழலோ, நிலத்தில விரிச்ச பாயோ! ஏதோ ஒருடத்தில இருந்து .....''

அவர் சொல்லியவற்றை இந்தப் பிள்ளைகளின் கல்விப் பெறுபேறுகளுடன் ஒப்பிடும் போது ஆச்சரியமாய் இருந்தது. இத்தனை இடர்களுக்குள்ளும், இடப்பெயர்வுகளினூடும் எப்படி படித்தார்கள்? பிரமித்தவாறு நான் தொடர்ந்து நடந்தேன்.

''தங்கச்சி, நீங்கள் எத்தினபேர் தொழிற் கல்வி படிச்சனீங்க?'' வழிகாட்டியவாறு என்னுடன் வந்துகொண்டிருந்த தங்கையிடம் கேட்டேன்.

''எங்கட அணியில இருபத்தியொருபேர் படிச்சனாங்க''

''தொழிற்கல்வி என்ற வகையில என்னென்ன படிப்பியள்?'' நான் தொடர்ந்தும் கேட்டேன்.

''ஆடை வடிவமைப்பு, றேடியோ மெக்கானிக், வீடியோ படப்பிடிப்பு, நிழற்படப்பிடிப்பு, கொட்டல் மனேச்மன்ற் இப்படி நிறைய விடயம் படிக்கலாம்.

''இதைவிட, எங்களோட படிச்ச பிள்ளையள் இப்ப உயர்கல்வி கற்றுக்கொண்டும் இருக்கினம் சிலர் ஆசிரியர்களாயும் நடன, சித்திர ஆசிரியர்களாயும் கூட வேலைசெய்யினம். இதைவிட ஆறுபேர் திருமணம் ஆகி வெளியால போட்டினம.''

''இண்டைக்கு ஒரு அக்கா தன்ரை பிள்ளையோட வந்தவ. அவ என்னோட தான் தொழிற் கல்வி படிச்சவ. நீங்க நிற்பியளெண்டால அவவோடையும் கதைக்கலாம்' என கூறியவாறு வரவேற்பு மண்டபத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

நான் வரவேற்பு மண்டபத்தை அடைந்த போது நேரம் மாலை ஆறுமணியைத் தாண்டியிருந்தது. சிறுமிகளின் படிப்பறைகளில் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. 'இண்டைக்கு படிக்கமாட்டன்' என அடம்பிடித்துக் கொண்டிருந்த ஒரு சின்னத் தங்கையிடம் அவளது தாய் ஏதோ கெஞ்சிக்கொண்டிருந்தார்.

பாடசாலையொன்றில் உயர்தர பரீட்சை எடுத்துவிட்டு, பெறுபேற்றிற்காய் காத்திருக்கும் ஒரு தங்கை எனக்கு தேனீர் தந்தாள். சிநேகபூர்வமான அவளுடைய புன்னகையைப் பார்த்து நான் கதைக்கத் தொடங்கினேன்.

''தங்கச்சி, நீங்கள் விடுமுறையில என்னத்தைவிரும்பிப் படிக்கிறனியள். கதைப் புத்தகமா? கவிதையளா?

''கவிதை தான் மாமா''

''என்ன? அவ்வளவு வேகமாய் சொல்றியள், ஆற்றை கவிதையள் உங்களுக்கு நல்லாப்பிடிக்கும்?''

''எனக்கு என்ரை கவிதையள்தான் கூடப்பிடிக்கும் மாமா''. சொல்லிவிட்டு வெட்கத்தோடு சிரித்தாள்.

அப்போது பக்கத்தில் நின்ற அவர்களின் 'சித்தி' சொன்னார். ''ஆள நல்லாக் கவிதை எழுதும்.''

''எல்லா இடமும் பார்த்தாச்சுதா?'' என கேட்டவாறு இல்லத்தின் நிர்வாகி அங்கே வந்தார். நின்றவர்கள் விலகிச்செல்ல, அங்கே இருந்த கதிரையொன்றில அமர்ந்தவாறு அவர் என்னுடன் கதைத்தார்.

செஞ்சோலையின் ஆரம்பம் முதல் இன்று வரையான அதன் வளர்ச்சியையும், வரலாற்றையும், அந்த இல்லத்தை வெற்றிகரமாக நடத்துவதில் அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களையும் அவர் எனக்குச் சொன்னார். கடந்த பத்தாண்டுகளாக சவால்களையும் நெருக்கடிகளையும் தொடர்ந்தும் எதிர்கொண்டபோதும் வளமானதொரு எதிர்காலத்தையும், சுயமான ஆளுமையையும் தன குழந்தைகளிடம் ஏற்படுத்தி வரட்ட ''செஞ்சோலை'' இல்லத்தின் நிர்வாகி செல்வி ஜனனி மலர்ந்த முகத்துடன் விடைதர, குதூகலத்து மகிழும் குழந்தைகளினதும், தன் வயசிகளை நிறைந்த தங்கைகளினது நினைவுகளுடனும் அவர்களிடமிருந்துவிடை பெற்றேன். O

1ம் பக்கத் தொடர்ச்சி

மாவீரர் நாள் உரை

அரசியல் இலட்சியங்களை அடைவதற்காக நடத்தப்படும் வன்முறை தழுவிய உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்குமே உலக அரசுகள் 'பயங்கரவாதம்' என்ற முத்திரையைக் குத்தியுள்ளன. இந்தக் குறுகிய வரையறையின் அடிப்படையில் உண்மையான உரிமைப் போராட்டங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் மத்தியிலான வேறுபாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அடிப்படை அரசியற் சுதந்திரங்களுக்காகவும் சுயநிர்ணய உரிமைக்காகவும் இரத்தம் சிந்திப் போராடும் விடுதலை அமைப்புக்களின் தார்மீக அடிப்படைகளுக்கு இதுவொரு சவாலாகவும் எழுந்துள்ளது. இதுவொரு கவலைக்குரிய விடயம். இந்தப் புதிய போக்குக்காரணமாகச் சர்வதேச அரங்கில் எமது சுதந்திரஇயக்கத்திற்கும் அவப்பெயர் ஏற்பட்டுவருகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் உலகநாடுகள் முதலில் அரசியல் வன்முறையின் மூலவேர்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அரசியல் வன்முறையின் தோற்றப்பாடு பற்றி ஓர் ஆழமான பார்வை இருந்தால்த்தான் உண்மையான விடுதலைப் போராட்டங்களுக்கும் குருட்டுத்தனமான பயங்கரவாதச் செயல்களுக்கும் மத்தியில் வேறுபாடு காணமுடியும்.

எமது பார்வையில் அரசியல் வன்முறையில் இரு பரிமாணங்கள் உள்ளன. முதலாவது, ஒடுக்குமுறையாளரின் வன்முறை. இரண்டாவது, ஒடுக்கப்படுவோரின் வன்முறை. ஒடுக்குமுறையாளர் எப்பொழுதுமே ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; அரச அதிகாரம் உடையவர்கள்; ஆயுதப் படைகளை வைத்திருப்பவர்கள். ஒடுக்கப்படுவோர் எப்பொழுதுமே ஆளப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சிறுபான்மைத் தேசிய இனத்தோராக, சுரண்டப்படும் மக்கள் சமூகமாக, ஏழைகளாக, அடிமைகளாக இருப்பார்கள். முதற்தர வன்முறையை அரச வன்முறை எனலாம். இரண்டாந்தர வன்முறையை அரச வன்முறைக்கு எதிரான வன்முறை எனலாம். அரச வன்முறையானது, ஒடுக்குமுறையாளரின் அடக்குமுறையான வன்முறை என்பதால் அது அநீதியானது. ஒடுக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்படுவோரின் வன்முறை நீதியானது. ஏனெனில் அது அநீதிக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விதமான வேறுபாட்டில்தான் ஒடுக்கப்படும் மக்களது வன்முறை வடிவிலான உரிமைப் போராட்டங்கள் நியாயத்தன்மை பெறுகின்றன.

வன்முறை வடிவில் உருவகம் பெறும் அரசியல் உரிமைப் போராட்டங்கள் அரச வன்முறையின் எதிர்வினையாகவே எழுகின்றன. உலக விடுதலைப் போராட்டங்களின் மூலத்தை ஆய்வுசெய்து பார்த்தால் இந்த உண்மை புரியும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று மூலமும் அதுதான். விடுதலைப்புலிகள் இயக்கம் உதயமாவதற்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே இலங்கைத்தீவில் அரச ஒடுக்குமுறை தலைதூக்கியது. இனவாதத் தீயாக மூண்ட இந்த அரச ஒடுக்குமுறை படிப்படியாக வளர்ச்சிகண்டு தமிழ்மக்களுக்கு எதிரான இனக்கொலை வடிவம் எடுத்தது.

சிங்கள அரசவன்முறைக்கு எதிராகத் தமிழர்கள் நிகழ்த்திய அகிம்சை வழியிலான அரசியற் போராட்டங்கள் அனைத்தும் அரச வன்முறையால் அடக்கியொடுக்கப்பட்டன. அமைதிவழிப் போராட்டங்கள் அர்த்தமற்றுப் போய்விட்ட அதேவேளை, அரச அடக்குமுறை தீவிரமடைந்து இனக்கொலைப் பரிமாணம் பெற்றதால், தமிழ் மக்கள் அரச வன்முறையை வன்முறையால் எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இன்னொருவகையிற் சொல்வதானால் பேரழிவை எதிர்கொண்ட தமிழினம், தனது இருப்பிற்காக, தனது பாதுகாப்பிற்காக, ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த வரலாற்றுப் புறநிலையில்தான் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்றம்பெற்று அரச வன்முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது. இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் எமது ஆயுத எதிர்ப்புப் போராட்டமானது இன்று தமிழரின் அரசியற் போராட்ட வடிவமாக வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறது.

நாம் ஒரு தேசிய விடுதலை இயக்கம். இனவாதக் கொடுமைக்கு எதிராக, அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக, அரச பயங்கரவாத வன்முறைக்கு எதிராக நாம் விடுதலை வேண்டிப் போராடி வருகின்றோம். எமது போராட்டம் ஒரு தீர்க்கமான, நியாயபூர்வமான அரசியற் குறிக்கோளைக் கொண்டது. ஐ.நா சாசனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் எமது போராட்டம் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் பயங்கரவாதிகள் அல்லர். மதவாத, இனவாத வெறியால் உந்தப்பட்டுக் குருட்டுத்தனமான வன்முறையில் ஈடுபடும்மனநோயாளர்களும் அல்லர். மனித விடுதலை என்ற உன்னதமான விழுமியத்திற் காதல்கொண்டே நாம் உயிரைக் கொடுத்துப் போராடிவருகின்றோம். நாம் சுதந்திர தாகம் கொண்ட இலட்சியவாதிகள்; நாம் சுதந்திரப் போராளிகள். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எம்மை அழிப்பதற்கு முயன்று தோல்விகண்ட சிங்கள அரச பயங்கரவாதிகள் எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பயங்கரவாத முலாம் பூசிவருகிறார்கள். இந்த அரச பயங்கரவாதிகளின் பொய்யான, விசமத்தனமான பரப்புரைகளை நம்பி உலக நாடுகள் சில எமது விடுதலை அமைப்பையும் பயங்கரவாதிகள் பட்டியலிற் சேர்த்துள்ளன. இது எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுக்கிறது. ஆயுத எதிர்ப்பு இயக்கமாக வளர்ந்து நிற்கும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வரலாற்றையும் நியாயப்பாடுகளையும் சீர்தூக்கிப் பாராது, இராஜதந்திர அழுத்தங்களுக்குப் பணிந்து, அவசரப்பட்டு எடுக்கப்பட்ட இந்நடவடிக்கைகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். குறிப்பாகச் சிங்கள இனவாத ஆட்சியாளர்களுக்கு இவை ஓர் தவறான சமிக்ஞையைக் கொடுக்கும். அவர்களது விட்டுக்

"சிங்களத்தின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக இனவாதம் நீடித்து நிலைக்குமானால், அந்த இனவாதமே தமிழீழத் தனியரசு பிறப்பதற்கான புறநிலையை அமைத்துக் கொடுக்கும். தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியென்றால் எந்தவொரு சக்தியாலும் அதனைத் தடுத்து விட முடியாது.



கொடுக்காத கடும்போக்கை மேலும் கடுமையாக்கும். அத்தோடு அவர்களது இராணுவ அடக்குமுறைக் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். ஒட்டுமொத்தத்தில் மேற்குலக நாடுகளின் இந்நடவடிக்கைகள் சமாதான வழிமூலமான தீர்விற்குக் குந்தகம் விளைவித்து, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை மேலும் சிக்கலடையச் செய்யும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்குலகம் தொடுத்துள்ள போரில் ஐ.நா வில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசுகளும் அணிசேர்ந்து நிற்கின்றன. இனவாத ஒடுக்குமுறைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் புகழ்போன பல அடக்குமுறை அரசுகளும் இந்தச் சர்வதேசக் கூட்டணியில் இணைந்து நிற்கின்றன. அதாவது, காவல் துறையினருடன் கொலைக்குற்றவாளிகள் கைகோர்த்து நிற்பதுபோல. நாம் இங்கு சிறீலங்கா அரசை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். இனக்கொலைப் பரிமாணத்தில மனித உரிமை மீறல்களை நடத்தி, உலக சாதனை ஈட்டியிருக்கும் இந்தப் பயங்கரவாத அரசு, உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேசக்கூட்டணியில் இணைந்து நிற்கிறது. இன்றைய சர்வதேச ஒழுங்கமைப்பில் இது ஓர் ஆபத்தான போக்கைக் குறித்துக்காட்டுகிறது. உலக ரீதியாக அரச அடக்குமுறைக்கு ஆளாகி நிற்கும் மக்கள் சமூகங்களின் நியாயமான உரிமைப்போராட்டங்களுக்கு இப்புதிய போக்கானது ஓர் அச்சுறுத்தலாக அமைகிறது. பயங்கரவாத வன்முறைக்கு எதிராகப் போர் தொடுத்து நிற்கும் மேற்குலக நாடுகளின் ஆவேசத்தையும், அச்சங்களையும், நிர்ப்பந்தங்களையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. உண்மையான பயங்கரவாதிகளை இனங்கண்டு தண்டிக்கும் நோக்குடன் சர்வதேச உலகம் மேற்கொள்ளும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் வரவேற்கிறோம். ஆயினும், அதேவேளை தீவிரவாத வெறியில் எழும் குருட்டுத்தனமான பயங்கரவாதத்திற்கும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் சுதந்திரப்போராட்டங்களுக்கும் மத்தியிலான வேறுபாட்டினை விளக்கும் வண்ணம் மேற்குலக சனநாயக நாடுகள் பயங்கரவாதம் என்ற பதத்திற்கு விரிவான, விளக்கமான வரையறையைக் கொடுப்பது அவசியமாகும். உள்நாட்டில் இனக்கொலைப் பரிமாணத்திற் கொடுமைகளை இழைத்துவரும் அடக்குமுறை ஆட்சியாளர்களின் அரச பயங்கரவாதத்தை சர்வதேச உலகம் அலட்சியம் செய்யமுடியாது. இந்தப் பயங்கரவாத அடக்குமுறை அரசுகளை இனங்கண்டு தண்டிக்க உலகம் முன்வரவேண்டும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மக்கள் இயக்கம். விடுதலைப் புலிகள் வேறு, எமது மக்கள் வேறு அல்லர். எமது மக்களும் நாமும் ஒன்றாகப் பிணைந்து, ஒன்றுபட்ட சக்தியாக, ஒரே இலட்சியப் பாதையில் எமது தாயகத்தின் விடிவிற்காகப் போராடி வருகிறோம். எமது இயக்கத்தை எமது மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடச் சந்திரிகா அரசு வஞ்சகமான வழிகளைக் கையாண்டது. எம்மைப் பயங்கரவாதிகளாகப் பிரகடனம் செய்து, எமது இயக்கம் மீது தடையை விதித்தது. இதனைத் தொடர்ந்து சந்திரிகாவும் அவரது வெளிவிவகார அமைச்சரான திரு. கதிர்காமரும் எமது இயக்கத்தையும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் பயங்கரவாதப் பூதமாகப் பூச்சாண்டி காட்டிச் சர்வதேச அரங்கில் தீவிர பரப்புரைப்போரைத் தொடுத்தனர். இதன் விளைவாக அமெரிக்காவும் பிரிட்டனும் அதனைத்தொடர்ந்து சமீபத்தில் கனடாவும் எமது விடுதலை அமைப்பை சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலிற் சேர்த்துள்ளன.

நாம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்பதும் நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ஒரு சுதந்திர இயக்கம் என்பதும் எமக்குப் பின்னால் எமது மக்களின் ஏகோபித்த ஆதரவு அணிதிரண்டு நிற்கிறது என்பதும் எம்மைத் தடைவிதித்த இந்நாடுகளுக்கு நன்கு தெரியும். அத்தோடு, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப்படவேண்டும் என்பதும் சிறீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு காணவேண்டும் என்பதும் இந்நாடுகளின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்நிலைப்பாடானது ஓர் உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது, தமிழீழ மக்களின் அரசியற் பிரதிநிதிகளாகவே விடுதலைப்புலிகளை இந்நாடுகள் கருதுகின்றன. அப்படி என்றால் ஏன் எமது அமைப்பைப் பயங்கரவாத இயக்கமாக இந்நாடுகள் முத்திரை குத்த வேண்டும்? எனவே, இந்நடவடிக்கையானது எந்தவகையிற் சமாதான ரீதியான ஒரு தீர்வை ஏற்படுத்த ஏதுவாக அமையும் என்பது எமக்குப் புரியவில்லை. சிறீலங்கா அரசாங்கம் எம்மீது விதித்துள்ள தடையை நீக்கி, எமது இயக்கத்தைத் தமிழீழ மக்களின் உண்மையான, சட்ட ரீதியான அரசியற் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளிற் பங்குபற்றப் போவதில்லையென்பதே எமது நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கிறோம். நோர்வே அரசிடமும் நாம் இதனை திட்டவட்டமாக கூறி →

யிருக்கிறோம். விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் சிறீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலகநாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சிற்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமதானப்பேச்சுக்குப் புலிகள் மீதான தடை நீங்கவேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச் சேர்க்கும்.

முழு அளவிலான போர் நெருக்கடியாக வெடித்துள்ள தமிழரின் தேசிய இனப்பிரச்சினை, அடிப்படையில் ஓர் அரசியற்பிரச்சினை என்பதை நாம் அறிவோம். இப்பிரச்சினையைச் சமாதான வழிமுறைகள் மூலமாகத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்து போகவில்லை. சிங்கள அரசியல் தலைமைகள் உண்மையாக, உறுதியுடன் மனம் வைத்தால் சமாதானமும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்தியமுண்டு.

இலங்கைத்தீவுக்கு சுதந்திரம் கிடைத்து ஐம்பத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் சிங்கள அரசியல் தலைமைகள் இன்னும் இனவாத சித்தாந்தச் சகதிக்குள்ளிருந்து வெளிவரவில்லை. இதனால் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை யதார்த்தமாக, புறநிலை நோக்குடன் அணுகித் தீர்க்கும் மனப்பக்குவம் அடையவில்லை. அடக்குமுறையாலும் ஆயுதப் பலத்தாலும் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற மனநிலையே சிங்கள அரசியல் உலகில் மேலோங்கி நிற்கிறது. இதன் காரணமாக எந்தவொரு சிங்களக் கட்சியிடமும் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் அணுகுமுறையோ, கொள்கைத் திட்டமோ இருக்கவில்லை. இந்த உண்மை சர்வதேச சமூகத்திற்குத் தெரியாததல்ல. தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழிமூலமான தீர்வை வலியுறுத்தும் உலகநாடுகள், அதேசமயம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்தும் சிறீலங்காவின் இராஜதந்திர நகர்வுகளுக்கும் போர் முயற்சிகளுக்கும் முண்டு கொடுத்து உதவத் தவறவில்லை. உலக நாடுகளின் இந்த விசித்திரமான அணுகுமுறையும் தமிழரின் பிரச்சினை தீராது இழுபடுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

சமாதானத்தின் கதவுகளை நாம் தட்டியவண்ணமே இருக்கிறோம். ஆனாற் சந்திரிகா அரசு சமாதானத்தின் கதவுகளைத்திறக்க மறுக்கிறது.



“மாவீரர் நினைவாக, ஈகச் சுடரை ஏற்றும் பொழுது, அந்த எரியும் சுடரில், அந்தத் தீ நாக்குகளின் ஆபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில், நான் ஒரு தரிசனத்தைக் காண்கிறேன்.

அக்கினியாகப் பிரகாசித்தபடி, ஆயிரமாயிரம் மனித தீபங்கள், நெருப்பு நதிபோல, ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசய காட்சி திடீரென மனத்திரையில் தோன்றிமறையும்.”

(மாவீரர் நாள் உரை 2000)

சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் நாம் நோர்வேயின் தூதுவர்களைச் சந்தித்து உரையாடியதையடுத்து சமாதான முயற்சியை முன்னெடுக்கும் நோக்குடன் நான்கு மாதங்களுக்கு ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்தோம். சந்திரிகா அரசு எமது அமைதி முயற்சியைக் கேலிசெய்து நிராகரித்ததுடன் ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இறுதியாக, எமது போர் நிறுத்தம் முடிவடைந்த ஒரு சில மணி நேரத்திற்குள் ''அக்கினிச்சுவாலை'' என்ற பாரிய படையெடுப்பை மேற்கொண்டது. இப்படையெடுப்பை முறியடித்து நாம் நடத்திய மூர்க்கமான எதிர்த்தாக்குதல் சிங்கள அரசுக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது. அதாவது, விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்படமுடியாத பலம்பொருந்திய சக்தியாக இருக்கிறது என்பதை உணர்த்தியது.

ஆட்பலத்தோடும் ஆயுதப்பலத்தோடும் நாம் வலுமிக்க போராட்ட சக்தியாக வளர்ச்சி கண்டு நின்றபோதும் சமாதான வழிமுறைக்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் இவ்வாண்டு தரைமார்க்கமாகப் பாரிய படை நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கி வந்தோம். இந்தச் சூழ்நிலையில்தான் நோர்வேயின் சமாதானத் தூதுவரான திரு. எரிக்சுல்கைம் புலிகளுக்குப் பக்கச்சார்பானவர் எனப் பொய்க் குற்றம் சாட்டி, சந்திரிகா அரசு அவரை ஓரம் கட்டி ஒதுக்கியது. இதனை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நோர்வே அரசின் சமாதான முயற்சிக்குத்தடை ஏற்பட்டது. இதற்குப் பொறுப்பாளி சந்திரிகா அரசுதான்.

மிகவும் நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தில், இலங்கைத் தீவில் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. நாம் பாராளுமன்றத்திற்குப் புறம்பாக நின்று போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலை அமைப்பு என்பதால் நாம் தேர்தல்களில் அக்கறை காட்டுவதில்லை. எனினும் எதிர்வரும் பொதுத்தேர்தல் தமிழீழத்திலும் தென்னிலங்கையிலும் விடுதலைப்புலிகளை மையப் பொருளாகக்கொண்டு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதன்மையான பிரச்சினையாக முனைப்புற்று நிற்கும் தமிழரின் தேசிய இனச்சிக்கலானது சமாதானம், போர் என்ற இரு முரண்பட்ட துருவங்களில் அரசியல் சக்திகளை ஈர்த்துவருகிறது. சமாதானம் வேண்டி நிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்திற்கு விரோதமான தீவிரவாத சக்திகளுக்கும் மத்தியிலான போட்டியாக இத்தேர்தல் நடக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இத்தீவில் சமாதானம் நிலவவேண்டுமா போர் தொடரவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு பொது மக்களிடம் விடப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காத வரை, அவர்களது அரசியல் அபிலாசைகள் நிறைவேறாதவரை இத்தீவில் சமாதானமும் இன ஒத்திசைவும் பொருளாதார மேம்பாடும் ஏறபடப்போவதில்லை என்பதை சிங்கள மக்கள உணர்ந்து கொளளவேண்டும்.

நாம் சிங்கள மக்களுக்கு விரோதிகள் அல்லர். எமது போராட்டமும் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அடக்குமுறைக் கொள்கை காரணமாகவே தமிழ், சிங்கள இனங்கள் மத்தியில் முரண்பாடு எழுந்து போராக வெடித்திருக்கிறது. ஆயுதப் பலத்தினால் எமது மக்களை அடிமைகொள்ள முனையும் அரசுக்கும் அரசுப் படைகளுக்கும் எதிராகவே நாம் போர் புரிந்து வருகிறோம். இந்தப் போரானது தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்து வருகிறது என்பது எமக்குத் தெரியும். போர் வெறிகொண்ட அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கொள்கையால் பல்லாயிரக்கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டு வருகிறார்கள். அதுமட்டுமன்றி, இப்போரினால் எழும் பொருளாதாரப்பளுவை சிங்களப் பொது மக்களே சுமக்கவேண்டியுள்ளது என்பதும் எமக்குத் தெரியும். எனவே, இக்கொடிய போருக்கு முடிவுகட்டி, நிரந்தரச்சமாதனத்தை நிலைநாட்டுவதாயின் போர்வெறிகொண்ட இனவாத சக்திகளை இனங்கண்டு ஒதுக்கி விடுவதோடு, தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவும் சிங்கள மக்கள் முன்வரவேண்டும்.

தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாளத்துடன் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாகத் தாம் வாழ்ந்து வந்த தாயக மண்ணில், நிம்மதியாக, சமாதானமாக, கௌரவத்துடன் வாழவிரும்புகிறார்கள். அவர்களது அரசியற் பொருளாதார வாழ்வை அவர்களே நிர்ணயித்துக் கொள்ள விரும்புகிறார்கள். தம்மை நிம்மதியாகத் தம்பாட்டில் வாழவிடுமாறு கேட்கிறார்கள். இதுதான் தமிழர்களது அடிப்படையான அரசியல் அபிலாசை. இது பிரிவினைவாதமோ, பயங்கரவாதமோ அல்ல. தமிழர்களது இக்கோரிக்கை சிங்கள மக்களுக்கு எந்த வகையிலும் ஓர் அச்சுறுத்தலாக அமையவில்லை. சிங்கள மக்களது அரசியற் சுதந்திரங்களையோ அல்லது அவர்களது சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வையோ இக்கோரிக்கையானது எவ்வகையிலும் பாதிக்கவில்லை. தமது சொந்த நிலத்தில், தம்மைத் தாமே ஆளும் ஆட்சியுரிமையோடு வாழ வழிவகுக்கும் ஓர் அரசியல் தீர்வையே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியற் தீர்வு அமையவேண்டுமென அவர்கள் வலியுறுத்துவதும் இதைத்தான்.

தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் அரசியல் தீர்வுத்திட்டம் குறித்துச் சிங்கள அரசுடன் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு எமது இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமத்துவமாக, சுதந்திரமாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தகைமையுடன் அவர்களது உண்மையான போராட்டச்சக்தி என்ற அங்கீகாரத்துடன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவேண்டும். தமிழீழ மக்களது ஒட்டு மொத்தமான அபிலாசையும் இதுதான். இதனைச் சிங்கள அரசியற் தலைமைகளும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டும்.

பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழவேண்டும். போர் நெருக்கடியும் பொருளாதாரத் தடைகளும் நீங்கிய இயல்பான, அமைதியான சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டுமென நாம் காலம் காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்த நிலைப்பாட்டையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வு காணப்பட்டால் தமிழர்களும் சிங்களவர்களும் ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில், ஆனந்தமாக, ஒத்திசைவாக, ஒன்றுகூடி வாழமுடியும். ஆயினும், அதேவேளை சமாதான மார்க்கமாகப் பிணக்கைத் தீர்ப்பதற்கு சிங்கள தேசம் இணங்க மறுத்தால் தமிழர்களாகிய நாம் பிரிந்துசென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

சிங்களத்தின் அரசியலை நிர்ணயிருக்கும் சக்தியாக இனவாதம் நீடித்து நிலைக்குமானால், அந்த இனவாதமே தமிழீழத் தனியரசு பிறப்பதற்கான புறநிலையை அமைத்துக் கொடுக்கும்.

தமிழீழத் தனியரசு உதயமாவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியென்றால் எந்தவொரு சக்தியாலும் அதனைத் தடுத்து விட முடியாது. என்றோ ஒரு நாள் தமிழீழத்தனி நாடு பிறந்து எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்